Registered as a News Paper in Sri Lanka.

தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்

ஒலி - 01 - கதிர் - 194 | 24-10-2000 | செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 5/-

அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி
மட்டக்களப்பு.

தொலைபேசி
065-24821

திருமலை கடற்படைத்தளம் மீது கரும்புலிகள் தாக்குதல் !

இரு கடற்கலங்கள் நாசம், எம்.ஐ. 24 – ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது !

(திருமலை, மூதூர் நிருபர்கள்)

திருகோணமலை துறைமுகத்தின் கடற்படை இறங்குதளம் மீது நேற்றக்காலை கடற் கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் படையினரின் போக்குவரத்து கப்பலான துருப்புகாவி முற்றாக முழ்கடிக்கப்பட்டுள்ளது. மற்றுமொரு டோறா படகு சேதத்திற்குள்ளானது. இதேவேளை படையினின் உதவிக்காக விரைந்த எம். ஐ. 24 ரக இராணுவ ஹெலிகப்டர் ஒன்றும் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.



கடற்படை தாக்குதலில் இரு கடற்படையினர் பலியாகினர். 40 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் தரப்பில் ஆறுபேர் மரணமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது

திருமலை துறைமுகத்தின் கடற்படைத்தள இறங்குதுறையில் நிறுத்தப்பட்டிருந்த டோறா பீரங்கிப் படகு ஒன்று நேற்றுக்காலை கரும்புலிகளின் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி கடலில் மூழ்கியுள்ளது.

படையினர் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் மற்றொரு கப்பலான துருப்புக்காவி பெரும்சேதத்திற்கு இலக்காகியுள்ளது.

அதிகாலை வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கடற்புலிகளின் நான்கு படகுகள் கடற்படை இறங்குதுறைப் பகுதிக்கு தாக்குதல் நடத்தவந்துள்ளன. இவற்றில் மூன்று படகுகள் துறைமுகத்திற்குள்ளும் ஒருபடகு வெளியேயும் வெடித்துச்சிதறியதாக செய்திகள் தெரிவிக்கின்றது.

எம்.ஐ. 24 - ஹெலி வீழ்ந்தது

(8ம் பக்கம் பார்க்க)

நிமலராஜனின் படுகொலையைக்கண்டித்து வடக்குக் கிழக்கில் பூரண ஹர்த்தால் !

(நமது நிருபர்)

யாழ் செய்தியாளர் படுகொலை செய்யப்பட்டதைக்கண்டித்து சுதந்திர மாணவர் முன்னணி எதிர்வரும் 27ம் திகதி வெள்ளிக்கிழமை வடக்குக்கிழக்கு மாகாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து துண்டுபிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

யாழ் செய்தியாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கேள்வியுற்று முழுத்தேசமுமே சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

எதிர்காலத்தில் மேற் கொள்ளவிருக்கும் படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் வெளியுலகத் திற்கு தெரிந்து விடக்கூடாது என்பதற்காகவே ஜனநாயகக் குரல் ஒன்றின் குரவளையை நெரித்துள்ளர்.

இதன் மூலம் முழுத்தமிழ் சமுகத்தின் வாய்களையும் மௌனியாக்கிவிடலாமென எண்ணுகின்றன.

அராஜகத்தைக் கண்டித்து எதிர்வரும் 27-10-2000 அன்று வடக்குக்கிழகில் (யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை) பூரண ஹர்த்தால் அனுஷ்டித்து அற்பசொற்ற எழும்புகளுக்காக ஸ்ரீலங்கா அரசின் முந்தானையைப்பிடித்துத் தொங்கும் கைக்கூலிகளை அம்பலப்படுத்துவதில் நாம் அனைவரும் ஒன்றினைவோம்.

என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாகர்கோவில் முகாம் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் முற்றுகையில்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் 4 படையணிகள் நாகர்கோவில் முகாமை தொடர்ந்தும் தமது முற்றுகைக்குள் வைத்திருக்கின்றனர். அங்கு தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நாகர்கோவில் முகாமுக்கான பிரதான விநியோகப் பாதையை விடுதலைப்புலிகள் தொடர்ந்து துண்டித்து வைத்துள்ளனர். சக்தி நிரம்பிய கடினமான கரையோரப் பாதை ஒன்றின் ஊடாகவே இராணுவத்தினர் தமது விநியோகங் களை மேற்கொள்கின்றனர்.

இரண்டு மாதத்தில் 226

(4ம் பக்கம் பார்க்க)

போலியோ சொட்டு மருந்து 28ம் திகதி வழங்கப்படும்

(நமது நிருபர்)

போலியோ சொட்டு மருந்து வழங்கல் இம்முறை ஒக்டோபர் மாதம் 28ம் திகதி மற்றும் டிசம்பர் 2ம் திகதிகளில் வழங்கப்பட இருக்கிறது.

இந்த முறை இவ் சொட்டு மருந்துநாடு பூராகவும் வழங்கப்படாது. வடக்குக் கிழக்கு பகுதிகள் மற்றும் இடம் பெயர்ந்த தமிழ் முஸ்லிம்கள் வாழும் புத்தளம் அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களிலேயே வழங்கப்படவுள்ளது.

சர்வதேச றோட்டரிக் கழகத்துடன் இணைந்து சுகாதார அமைச்சு இம்முறை இம்மருந்து வழங்கலைச் செய்யவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 63, 000 சிறுவர்கள் இம்மருந்தைப் பெறவுள்ளனர். இவர்களுள் 14,000 பேர்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மாதத்தில் 226 இராணுவம் பலி 2000 பேர்காயம்

கடந்த இரண்டுமாத காலப் பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 226 படையினர் பலியாகியுள்ளனர். 2000 படையினர் காயமடைந்துள்ளனர். என இராணுவத்தளபதி பல்கல்ல நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

காத்தான்குடியில் குண்டுகள் செயலிழப்பு

(அன்சார்)

நேற்று திங்கற்கிழமை காலை 8.30 மணியளவில் காத்தான்குடி பிரதான வீதி முதலாம் குறிச்சியில் இரு குண்டுகள் செயளிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

கடந்த திங்கட்கிழமை இரவு 10.00 மணியளவில் காத்தான்குடி 1ம் குருச்சியிலுள்ள தொலைபேசி பெட்டியொன்றினுள் வைக்கப்பட்டிருந்த அதை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர் உடனே ஸ்தலத்திற்கு விரைந்த பாதுகாப்பு படையினர் அன்று இரவு முழுவதும் அதை பாதுகாப்போடு வைத்திருந்து காலை 8.00 மணியளவில் குண்டு

(8ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் கல்லடி உப்போடையில் இனந்தெரியாத நபர்களினால் ஏவப்பட்ட டொம்பா கிரனைட் தாக்குதலின் போது சேதமடைந்த வீட்டின் சேதமடைந்த பகுதிகளை படத்தில் காணலாம்.

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

அணி திரளும் இனவாதம்

இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சி இப்போது நடைபெற்று வருகிறது.

இந்தமுறை பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை வழங்கவில்லை.

பொ.ஐ.முன்னணிக்கு 43 வீத வாக்குகளையும் ஐ.தே.கட்சிக்கு 40 வீத வாக்குகளையும் வழங்கி இவ்விரு கட்சிகளையுமே தனித்து ஆட்சியமைக்க முடியாத ஒரு நிலைக்கு அவர்கள் தள்ளியுள்ளனர்.

சென்ற முறை ஜனாதிபதித் தேர்தலிலும் கூட மயிழையிலேயே ஜனாதிபதி சந்திரிகா தப்பிப் பிழைத்தார்.

இது உண்மையில், தேர்தல்களில் யாரைத் தெரிவது என்பதில் மக்களுக்கிருக்கும் ஓர் குழப்ப நிலையையே காட்டி நிற்கின்றன.

தமது ஆதரவை யாருக்கு அளிப்பது என்பதில் ஒரு நிலையினை எந்த ஒரு கட்சியுமே காட்டி நிற்காமையே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

மக்களுடைய அடிப்படைப் பிரச்சனைகள், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தெளிவான கொள்கையெதனையும் எந்த ஒரு கட்சியும் கொண்டிருக்க வில்லை.

இன்று தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஏதோவோர் வகையில் பாதித்து வரும் இனச்சண்டைக்கு ஒரு தீர்வு வேண்டுமென்பதே அனைத்து மக்களினதும் விருப்பமாகும்.

அதனைத் தீர்ப்பதற்கான உறுதியை வழங்கிய சந்திரிகாவை மக்கள் அதிகப் பெரும்பாண்மையுடன் ஜனாதிபதியாக்கினர். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு பூர்த்தியாகவில்லை.

இன்னும் சண்டையைக் காரணம் காட்டி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளும் வழமையான அரசியல் சாணக்கியத்தையே ஜனாதிபதி சந்திரிகாவும் கடைப்பிடித்தார். வேளை இனப்பிரச்சினை பற்றிய தெளிவான நிலைப் பாடெதனையும் ஐ.தே.க.வும் முன்வைக்கவில்லை.

எனவே இத்தகைய ஓர் நிலையில் மக்களது உண்மையான ஓர் விருப்பத்தேர்வுக்கு எங்கே. இடமிருக்கப் போகிறது?

குழப்பமான நிலையில் ஏனோதானோ என அளிக்கப்பட்ட வாக்குகளும், தனிப்பட்ட இலாபங்களுக்காக அளிக்கப்பட்டவையும், கள்ள மோசடி வாக்குகளுமே இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளன. இத்தகைய ஓர் நிலையில், எந்தவோர் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை எப்படிக் கிட்டும்.

ஆனாலும் பொ.ஐ.மு.க்கு சாமரை வீசக் கூடிய சிறுபாண்மைக் கட்சிகளைத் தன்பக்கம் அணைத்து அவை முன்வைத்த நிபந்தனைகளையும் சமாளித்து ஒருவாறு ஆட்சியமைத்துள்ளது.

ஆனாலும் சிங்கள இனவாதிகளுக்கு இது பொறுக்கவில்லை.

அரசாங்கத்தை அமைப்பதை சிறுபாண்மைக் கட்சிகள் தீர்மானிப்பதா? என்ற இன உணர்வு அவர்களுக்கு

பௌத்த மகா சங்கம் உடனே பொ.ஐ.மு.உடன் இணைந்து தேசிய அரசை அமைக்குமாறு ஐ.தே.க.வுக்கு அழுத்தம் கொடுத்தது. யுத்தம் நிறுத்தப்படவேண்டும். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் எனக் கூறிவந்த ஐ.தே.க.அதையெல்லாம் மறந்து யுத்தம் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறிவரும் பொ.ஐ.மு.வுடன் கூட்டுச் சேர்வது பற்றி மாநாடு கூடி கலந்தாலோசிக்கிறது.

நாட்டின் பிரதான சிக்கலான இனப்பிரச்சனைத் தீர்வை மறந்து சர்வசாதாரண விடயங்களில் பொது இணக்கப்பாடு காணப்பட்டால்ப் போதும் என இரு கட்சிகளுமே கூறியுள்ளது.

இதேவேளை பிரதமர் இரத்ணசிறி சபாநாயகர் அனுரா மற்றும் சில அமைச்சர்களுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் அஸ்கிரிய பீடாதிபதியைச் சென்று சந்தித்து ஆசி பெற்று வந்துள்ளார். சிறுபாண்மைக் கட்சிகளை ஓரங்கட்டும் எண்ணத்துடன் செய்யப்பட்டுவரும் இந்த முயற்சியை ஹக்கீம் வாழ்த்தியுள்ளமை வேடிக்கையானது.

எப்படியோ, சிறுபாண்மைக் கட்சிகளை ஓரம்கட்டி, பெரும்பாண்மை இனத்தை மட்டுமே கொண்ட ஓர் அரசை அமைக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இனப்பிரச்சினை பற்றித் தெளிவான நிலைப்பாடு எதுவுமின்றி அமையப்போகும் இத் தேசிய அரசின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இனவாதிகள் அணி திரளும் இந்த நிலையில். சிதறுண்டுபோய் நின்று தனித் தனி நியாயங்கள் கூறும் தமிழ்க்கட்சிகள் என்ன செய்யப்போகின்றன?

ஐ.நா.வில் ஒலித்த ஈழத்தமிழர் பிரச்சினைகள்

அரை நூற்றாண்டு காலத் திற்கு மேலான அனைத்துலக பணியாற்றல் மூலமாகவும் மூன்னெடுப்புக்கள் மூலமாகவும் சர்வ தேச தலைமையமாகஐக்கிய நாடுகள் சபை மிளிர்கிறது. சுயெஸ் கால்வாய் பிரச்சினை தொட்டு, கொசோவா, கிழக்குத்தீமோர் ஈறாக ஐ.நா.மத்திய ஸ்தம் வகித்து வந்துள்ளது. 'உலக பொலிஸ்' ஆக தன்னை இனங் காட்டும் அமெரிக்காவின் அதீத தலையீடு காரணமாக ஐ.நா.வின் நேர்மைத்துவம் விவாதத்திற்கு உள்ளாகியும் வந்துள்ளது. அக்டோபர்-24 'ஐ.நா.தினம்' அனுட்டிக்கப்படும். வேளையில் ஈழத்தமிழர் பிரச்சினைகளை மையப்படுத்தி கருத்துக்களைப் பகிர்வது பொருத்தமுடைய தாகிறது.

கடந்த சில ஆண்டுகளாக வடக்கு-கிழக்கு தமிழர் தாயக ஆள்புலத்திலிருந்து புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் சர்வதேசக் கவனயீர்ப்பை 'ஈழத்தமிழர் இறைமை' தொடர்பாக ஈட்டுவதில் மகத்தான பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். 1990களின் பிற்பகுதியில் சர்வதேச மானிடவியலாளரும் ஊடகங்களாலும் 'தமிழ் அலைவு' (Tamil Diaspora) என்றழைக் கப்படுகின்ற இப்புலம் பெயர்வு ஊடாக, மண்ணுக்கும் புலத்துக்கும் பாலம்மைக்கும் வகையிலும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை வீறுபடுத்தும் வகையிலும் பல்வேறு வகைகளினூடாக செயற்படுத் தப்பட்டு வருவது கண்கூடு.

ஈழத் தமிழர் பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்த கண்டனப் பேரணி கள்,மனித சங்கிலி போராட்டங்கள், கலைப்பண்பாட்டு நிகழ்வுகள் என இன்னோரன்ன வழிகளாக புலம் பெயர்ந்த மக்கள் முயன்று வருகின் றனர். கடந்த இரு ஆண்டுகளில் இவ்வணையத் தளங்களிலும் 'ஐ.நா.வின் மத்தியஸ்தம் ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக இடம்பெற வேண்டும்.' என்ற வாதம் பரவலாக இடம்பெற

"பார்க்க விரும்பாதவர்களுக்கு நாம் கண்களை கொடுக்க முடியாது கேட்க மறுப்பவர்களுக்கு காதுகளை கொடுக்க முடியாது உணர மறுப்பவர்களுக்கு இதயங்களை தர முடியாது ஆனால் மாறி வரும் புதிய உலகில் எங்கு நோக்கிலும் குறிப்பாக இளைஞர்களிடையே மனச்சாட்சியும் உணர்ச்சியும் தியாகமும் நிறைந்த புதிய புரட்சி உருவாகி வருகிறது.

ஐ.நா.வின் இரு தலையீடுகளே காரணமாயிருந்தன.என்ற கருத்து நிலவியிருந்தது.

'கொசோவோ விடுதலை இராணுவம்' (KLA-Kosovoa liberation Army) தலமையிலான கொசோவோ விடுதலைப் போராட்டம் மற்றும் 'சனானா குஸ்மாவோ' தலை மையிலான '.ப்ரெற்றிலின்' இயக் கத்தின் கிழக்குத் தீமோர் விடுதலைப் போராட்டம் என்பவற்றில்

நீண்ட காலம் உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு நாட்டில் சுகந்திரம் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல அதிகார பறிமுதலும் சட்ட விசோரமான ஆக்கிரமிப்பும் இன்றைக்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஒரு மக்கள் கூட்டத்தில் சுய நிணய உரிமை பற்றியும் அந்த மக்களின் நாட்டு எல்லாகள் பற்றியும் பிரச்சினைகள் இருந்து வருகிறது."

ஐ.நா.வின் தலையீடுகளே அவ்விரு காரணங்களாக நோக்கர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தன.

ஐ.நா.வின் பொதுச்சபையில் முதன் முதலாக ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி உரையாற்றக் கூடிய வாய்ப்பு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துக்கு கிட்டியிருந்த போதும் அவ்வாறு அது நிறைவேறியிருக்கவில்லை. 1965-1969 காலப்பகுதியில் உத்தியோக பூர்வ பிரதி நிதியாக இவர் டட்லி-சேனநாயக்காவினால் அனுப்பப் பட்டிருந்தமையால் அவரால் முடியாமல் போயிருந்தது. இங்கு அவர் ஆற்றியிருந்த ஆங்கில உரையின் சொல்வன்மையினால் ஈர்க்கப்பட்ட ஒரு மேலை நாட்டுப் பெண் ஆரத்தழுவி அவருக்கு முத்தம் கொடுத்திருந்தார். என்றும் சென்ற வருடம் கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர் நினைவு படுத்தியிருந்தார்.

ஆயினும் ஐ.நா.வில் ஈழத்தமிழன் சார்பாக முதன் முதல் உரையாற்றிய பெருமை திரு.கிருஷ்ணாவைகுந்தவாசன் என்ற ஈழத் தமிழ் சட்ட அறிஞரையே சாரும். 1978 அக்டோபர் 05ம் திகதி வியாழக்கிழமை ஸ்ரீலங்காவின் பிரதிநிதியான வெளிவிவகார அமைச்சரான 'ஹமீது' உரையாற்றும் முன்பாக 'தமிழீழத்தின் பிரதிநிதி' என்று தன்னை அறிமுகப்படுத்தி சம்பிரதாயங்களை மீறி உரையாற்றி சர்வதேசக் கவனீர்யை ஈழத்தமிழர் மீது அன்றே ஈட்டியிருந்தார் இவர்.

'என் பெயர் கிருஷ்ணா. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள 25இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட 'தமிழீழத் தேசத்திலிருந்து பிரதிநிதியாக வந்துள்ளேன். ஸ்ரீலங்கா அரசு சிறுபாண்மை இனத்தோரைத் துன்புறுத்தி ஒடுக்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது..'

(4ம் பக்கம் பார்க்க)

தியான யோகம்

(Yoga of Meditation)

ஒவ்வொரு சமயத்திலும் குருமார், உட்பட அனேக பொதுமக்களும், தியானம் செய்வதாக அறிகின்றோம். இவர்கள் உண்மையாகவே தியானிக்கின்றார்களா என்பது ஒரு கேள்விக் குறியாகும். தியானிக்கின்ற அனேக சுவாமிகள் தற்போது கம்பி எண்ணுவதாக பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். உண்மையாக நடந்தது என்ன இவர்கள் உண்மையாக தியானித்தார்களா? ஆசாபாசங்களும்,மண்,பெண்,பொன் என்ற ஆசைகள் இருக்கும் வரைக்கும், மெய்பாடுகளின் கைவரிசையான கோபம்,வரிச்சல், பொறாமை,பற்று,காதல் என்னும் மெய்பாட்டு உந்தல்கள் இருக்கும் வரை எவருக்கும் உண்மையான தியானம் (Meditation) செய்ய முடியாது.

பகவத் கீதையில் கிறிஸ்ன பரமாத்மா கூறுகிறார்."பலன்களை எதிர் பாராது எவர் தனது கடமைகளை செய்கிறாரோ அவரே சன்னாசியும் யோகியும் ஆவார்", மற்றும் வாழ்கையையோ அல்லது செயல்களையோ துறந்தவர்கள் அல்ல. என்று சங்கல்பம்(ஆசைகள்) துறக்காத பட்சத்து எவருமே தியானிப்பவர்களாகக் கருத முடியாது. புலப் பொருட்கள் மீதோ (Seuse objects) அல்லது புலன்களினால் ஏற்படும் செயல்கள் மீதோ பற்று அற்றவர்களும்-சங்கல்பம் என்னும் ஆசைகளை துறந்தவர்களுமே- யோகி என்னும் நல்ல நிலைப்பாட்டை அடைவர். ஒருவர் யோகம் என்னும் நிலையை அடைய வேண்டுமானால், செயல்களே (Actions) முக்கியமானது என்றும் கிருஷ்ண பரமாத்மா அறுத்துக் கூறுகின்றார். இவரே இறைஞானமும் அடையக்கூடியவர். "'மனிதன் தன்னாலே தன்னை உயர்த்தட்டும் தன்னை தாழ்த்த வேண்டிய தில்லை.'ஏனென்றால் அவனே தனது நண்பனும் பகைவனும் ஆவான். தனது எதிரி தானேயன்றி வேறு எவருமில்லை. வெளியுலகில் அல்ல. எவன் ஒருவன் தன்னை வெற்றி கொள்கிறானோ அவனே அவனுக்கு நண்பனாகின்றான். வெற்றி கொள்ளாத விடத்த அவனே அவனுக்கு பகைவன் ஆகின்றான். மேலான ஒருவன் தன்னை அடக்கி ஆண்டு கொண்டால், அவனுக்கு குளிரும் வெப்பமும் ஒன்று தான். இன்பமும் துன்பமும் ஒன்று தான். மதிப்பும் அவமதிப்பும் ஒன்று தான் அதாவது இன்பத்தைக் கண்டு பெருமகிழ்வு பெறுவோ.அல்லது துன்பத்தைக் கண்டு கதிகலங் கிடவோ மாட்டான். இந்த நிலை ஏற்பட்டால்தான் உண்மையான யோகியாவான். அவனுக்கு இப்பூமியில் உள்ள 'கல்லும் பொன்னும் ஒன்றுதான். அவன் யுக்த (Yukta) நிலையை அடைகின்றான். அதாவது உண்மையோடு அணைகிறான். (unitito tiuth). இந்த நிலையை அடைந்த யோகிகள். நல்லவர்களையும், கெட்டவர்களையும்,சினேகிதர் களையும்,எதிரிகளையும் எல்லா மக்களையும் பாராபட்சமின்றி ஒரே மாதிரி பார்ப்பார்கள். ஓர் கர்ம யோகி எவ்வித பலனையும் எதிர்பாராது செயல்களில் ஈடுபடுவார். ஆகவே ஒவ் வொருவரும் இருந்து தியானிக்கும் பொழுது மனதை ஒருமுகப்படுத்தி மேலான எண்ணங்களை நினைத்து, தியானிக்க வேண்டும்.துறவறம் பூண்டு சன்யாசத்தை மேற் கொண்டாலும் கர்ம யோகமே மேலானது என்று கிருஷ்ண பரமாத்மா கூறியுள்ளார்.

மகேசன்-தம்பிராசா
குருக்கள் மடம்

3வயதுச் சிறுவன் உட்பட பதினைந்து பேர் படுகொலை

அசாமில் சம்பவம்

(புதுடில்லி)

பிரிவினைவாத கெரில்லாக்கள் 3 வயது சிறுவன் உட்பட 15 பேரைக் கொன்றுள்ளார்கள்.

அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி தீவிரவாதிகள் சண்டையொன்றில் தன்னியக்கத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார்கள். இதில் 10 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் 6 பேர் காயமடைந்தனர். வர்த்தகர்களிடம் கப்பம் கேட்டபோது அதை கொடுக்க மறுத்த ஒரு வர்த்தகர் கடையிலேயே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேசமயம் பிரதமர் வாஜ்பாய் இரண்டு வார காலத்திற்குப் பின்னர் புதுடில்லியில் தனது உத்தியோக பூர்வ கடமைகளை ஆரம்பித்தார்.

இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் சம்பிரதாயத்திற்குப் புறம்பாக நேற்று முன்தினம் இரவு புதுடில்லி விமான நிலையத்திற்குச் சென்று பிரதமரை வரவேற்றார்.

பிரதமர் வாஜ்பாய் ரெயில்வே அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடாத்தவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

வாஜ்பாய்க்கு ரஷ்யா அழைப்பு

(மொஸ்கோ)

இந்தியா-ரஷ்யா இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் வண்ணமும், நட்புறவை வளர்க்கும் வண்ணமும் ரஷ்யாவுக்கு இந்திய பிரதமர் வருகை தரவேண்டும் என்று ரஷ்ய பிரதமர் டிதின் பிரதமர் வாஜ்பாய்க்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த தகவலை வாய்ஸ் ஆப் ரஷ்யா என்ற ரஷ்ய பத்திரிகை செய்தியாக வெளியிட்டுள்ளது. இதனையொட்டி வாஜ்பாயி அடுத்த ஆண்டு ரஷ்யா பயணமாவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

சாகசம் புரியும் டொல்பின் குட்டி

அமெரிக்காவைச் சேர்ந்த புலோரிடா மாநிலத்தில் உள்ள ஆலன்டோவின் டிஸ்கவரி ஜேவ் என அழைக்கப்படும் இடத்தில் ஜெனி என்ற டொள்பின் குட்டி ஒன்றை ஈன்றுள்ளது.

சுமார் 3அடி நீளமுள்ள அந்தக் குட்டி டொள்பின் 30கிலோ எடையையும் கொண்டுள்ளது. அது தனியாக இருக்கும் போது தாயுடன் கொஞ்சி விளையாடுகிறதாம். சாகசக் காட்சிகள் நடைபெறும்போது சாகசங்களைச் செய்து பார்வையாளர்களை வியர்ப்புக்கள்ளாக்குவதாகவும் தெரியவருகிறது.

தாய்லாந்து குழந்தையை கற்பழித்தவருக்கு மரண தண்டனை!

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தனது தாய்லாந்து பயணத்தின் போது சிறுமி ஒருவளை கற்பழித்ததை ஒப்புக் கொண்டார். இதனால் அவருக்கு 20 வருடம் தண்டனை தரப்படும் என்று கோர்ட் தெரிவித்து உள்ளது. பிரான்ஸை சேர்ந்த அம்னன் செமொயில் (வயது 47) இவர் போக்குவரத்து கழக தொழிலாளியாக இருந்த போது தாய்லாந்து நகருக்கு ஜாலி டூர் சென்றாராம். 1994-ல் டூர் சென்ற இந்த ஆசாமி அங்குள்ள 11 வயது குழந்தை ஒன்றை ஹோட்டல் அறையிலும், கடற்கரையிலும் வைத்து கற்பழித்துள்ளார்.

தற்போது 17 வயது நிறைந்த அந்த பெண்மணிக்காக வழக்கு தொடுக்கப்பட்டது. இதில் குற்றம் சாட்டப்பட்ட அம்னன் குழந்தையை சீரழித்ததற்காக 50 ஆயிரம் பிரெஞ்சு பணம் அபராதம் தர வேண்டும் என்றும் கோர்ட் உத்தரவிட்டது. இந்த வழக்கில் ஆஜராக பாரிஸ் வந்த அந்த சிறுமியின் செலவுக்காக ஐ.நா.வின் யுனிசெப் நிறுவனம் உதவிபுரிந்தது. இவ்வாறு 2 மில்லியன் குழந்தைகள் சிறுவயதில் கற்பழிக் கப்படுவதாக கண்டறிந்துள்ள யுனிசெப் இதில் 4 லட்சம் குழந்தைகள் தாய்லாந்தில் மட்டும் உள்ளன என்று தெரிவித்துள்ளது. அம்னன் வக்கீல் 5 ஆண்டு மட்டும் தண்டனை தர கேட்டுக் கொண்டாராம்! போலீசார் விசாரணையில் கற்பழித்தவர் வீட்டில் மேலும் 2 சுவிஸ் நாட்டுக்காரர்களின் புகைப் படம் சிக்கியுள்ளதாம். 1997-ல் இந்த ஆசாமி சுவிஸ்-பிரான்ஸ் போலீஸ் கூட்டு முயற்சியில் கைதானாராம். இவருக்கு 20 ஆண்டுகள் தண்டனை கிடைக்கும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டறியில் இயங்கும் செயற்கை கை

விபத்து போன்றவற்றில் கை, கால் துண்டானால் டாக்டர்கள் ஆபரேஷன் மூலம் அதை ஒட்ட வைக்கின்றனர். அதற்கு மேலாக இப்போது இறந்தவர் உடலில் இருந்து பாகங்களை எடுத்து பாதிக்கப் பட்டவருக்கு பொருத்தும் சாதனையும் நடந்து வருகிறது. இதை எல்லாம் மிஞ்சும் வகையில் ஒருவருக்கு செயற் கையான கை பொருத்தப்பட்டு இருக்கிறது. அவர் பெயர் கேம்பெல் அர்ட். ஸ்காட்லாந்து ஓட்டல் அதிபர். செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட இந்த கை மிகவும் நவீனமானது. பாட்டரி மூலம் இயங்கக்கூடியது. அந்த கைக்குள் பாட்டரியும், மோட்டாரும் இருக்கும். மோட்டார் இயங்குவதன் மூலம் கை அசையும். இந்த நவீன கை மனிதர்களின் கையைவிட எடை குறைவானது ஆகும்.

குரங்கை வைத்து வித்தை காட்டி பிழைக்கும் சிறுவன் ஒருவன் டில்லி பாராளுமன்ற கட்டிடத்துக்கு முன்பு குரங்குடன் போஸ் கொடுத்த காட்சி

தேர்தலில் போட்டியிட்ட இராணுவத் தளபதி முன்னணியில்

(அபிஜன்)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான ஐவரி கோஸ்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட இராணுவத் தலைவர் ரொபர்ட் குயீ முன்னணியில் உள்ளார் என இவரது பிரச்சாரக் குழு தெரிவித்துள்ளது.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் பிரதான தேர்தல் அதிகாரிகள் அனைத்திலும் இவர் முன்னணியிலத் திகழ்கின்றார்.

இவரது பிரதான போட்டியாளரான லொரோ கொபோ வெற்றி பெற்ற பிரதேசங்களில் ஒப்பீட்டளவில் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளார். ஆனால் பிரதான நகரங்களில் பெருமளவானோரது வாக்குகளை மேலதிகமாக ரொபர்ட் குயீ வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாகவும் தெரியவருகிறது.

பிரிவினை வாதிகளுடனான சண்டையில் ரஷ்யப் படையினர் இருவர் பலி, 10 பேர் காயம்

ரஷ்ய பிரிவினை வாதிகளுடன் நேற்று முன்தினம், இரவு ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் ரஷ்ய துருப்பினர் இருவர் பலியானதுடன் 10 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

செச்சினியாவின் வடக்குப் பிரதேசத்தின்பாதுகாப்பு நடவடிக்கைகளில் ரஷ்ய துருப்புகள் ஈடுபட்டிருந்த வேளையில் இச்சண்டை ஏற்பட்டுள்ளது

-இதேவேளை தென் ரஷ்ய மலைப்பிரதேசத்தில் வாழும் கிராம வாசிகளை தங்களுடன் சேர்த்துக்கொள்ளுமாறு பிரிவினை வாதிகளது தலைவர் ஷாமில் பசேயோ அழைப்புவிடுத்து துண்டுப் பிரசுரங்களை விடுத்துள்ளார். இவ்வாரத்துக்குள் குடியரசின் ஏராளமான பிரதேசங்களில் பிரிவினை வாதிகள் பாரிய தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் இராணுவத்தினரிற்குக் கிடைத்த தகவலை பொதுமக்களை எச்சரிக்கையுடன் இருப்பதாகவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பஸ் விபத்தில் 7பேர் பலி !

(ஆர்ஜன்டினா)

ஆர்ஜன்டினாவின் குலனாஸ் அயோசில் இடம்பெற்ற வாகன விபத்தில் 10 மாதக்குழந்தை உட்பட7பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடுமையாக பெய்த மழையின் காரணமாகவே இவ்விபத்து நடந்தது என பொலீசார் அறிவித்துள்ளனர். 44 பேர் பயணம் செய்த பஸ் வண்டியில் 30 பேர் காயமடைந்துள்ளனர். விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்த அப்பிராந்திய வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் காயமடைந்த வர்களை விரைவாக அம்புலன்ஸ் வண்டியில் எடுத்துச் செல்லும் பணியில் துரிதமாக மேற்கொள் ளப்பட்டதாகவும் இதனால் மேலும் பல உயிரிழப்புக்களைத் தடுக்கக் கூடியதாகஇருந்ததாகவும் தெரிய வருகிறது

புட்டின்-கிளின்டன் டெலிபோன் பேச்சு!

(மொஸ்கோ)

ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புதின் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனுடன் டெலிபோனில் பேசினார். ஆனால் எது சம்பந்தமாக பேசினார் என்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை. ரஷ்ய செய்தி நிறுவனங்கள் இந்த தகவலை கிரெம்ளினின் செய்தி தொடர் பாளர் அலெக்ஸ் குரோமோவ் தெரிவித்ததாக கூறியுள்ளன. அவர் மேலும் கூறுகையில். புதின் மேற்காசிய பிரச்சினை தொடர் பாக இஸ்ரேலிய பிரதமர் எகுத் பராக்குடனும் டெலிபோனில் தொடர்பு கொண்டு பேசினார். எகிப்தில் நடந்த மாநாட்டுக்கு மாஸ்கோ அழைக்கப்படவில்லை. ரஷ்யாவில் உளவு வேலை பார்த்ததாக அமெரிக்காவின் எட்மண்ட்பேஸ் என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது என்று ராய்டார் தெரிவிக்கிறது.

பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக எகிப்தில் பேரணி !

(கெய்ரோ)

எகிப்து நாட்டில் பாலஸ்தீனர்களும் ஆதரவாக பேரணி நடத்தப்பட்டது. இதில் ஏராளமான இஸ்லாமிய இளைஞர்கள் கலந்து கொண்டனர். கெய்ரோவில் உள்ள அல்-அஸ்கர் மசூதியில் நடந்த தொழுகையின்போது இறந்த பாலஸ்தீனர்களுக்காக விசேஷ பிராத்தனை நடந்தது. பின்னர் நடந்த பேரணி இஸ்ரேல் தூதரகம் நோக்கி சென்றது. சுமார் 10 ஆயிரம் பேர் இதில் உண்டான கோரங்களுடன் பங்கேற்றனர். இதில் 500 எகிப்தியர்கள் இஸ்ரேலுக்கு எதிராக புனிதப்போர் அழைப்பு விடுத்துள்ளனர். இதனிடையே மேற்குகரை பகுதியில் சண்டையில் இறந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 121 ஆக உயர்ந்துள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனர் மீண்டும் மோதல்

(ஜெருசலேம்)

மேற்காசிய பிராந்தியத்தில் அமைதிக்காக எகிப்து நாட்டின் ஷரம் ல் ஷேக்கில் நடந்த உச்சிமாநாடு சமாதானத் துக்காக வெள்ளைக்கொடியை உயர்த்தி பிடித்தாலும், இஸ்ரேல்-பாலஸ்தீனர் இடையே ரத்தம் சிந்தும் பணி தொடர்கிறது. வெள்ளியன்று சிறப்பு தொழுகைக்காக அல்-அக்ஸா மசூதிக்குள் இரு வேறு நுழை வாயில்கள் வழியாக பாலஸ்தீன இளைஞர்கள் உள்ளே நுழைந்தனர். இதனை கண்டித்து போலீசார் தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு அமைதி மாநாட்டுக்கு பின்னரும் சண்டைகள் தொடர்கின்றன. இதனிடையில் அமெரிக்க அதிபர் கிளிண்டன் எகுத் பராக்கையும், யாஸர் அராபத்தையும் அமைதியை நிலை நாட்ட நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

உகாண்டாவில் காச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கம்பாலா)

உகாண்டாவில் எபோலா என்னும் விஷக்காய்ச்சல் நின்ற பாடில்லை. அங்கு இந்த காய்ச்சலால் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த எபோலாவின் பாதிப்பிக்கு மரணமடைந்தோர் எண்ணிக்கையும் 122 ஆக அதிகரித்துள்ளது. இங்கு இந்த நோயை கட்டுப்படுத்த மருத்துவர்கள் கடும் முயற்சி எடுத்து வருகின்றனர். ரோம் அடிப்படையாக கொண்டு இயங்கும் ஐ.நா. உணவு கழகம் அவசர நடவடிக்கையாக மருந்து மற்றும் உணவுகளை அனுப்பி உள்ளது. குலு என்ற இடத்தில் மட்டும், 600 பேர் எபோலா தாக்குதலால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊடருவிப் புல்லினம் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்து

(நமது நிருபர்)

இந்தியாவில் இருந்து கொண்டுவரப் பட்டது என கருதப்படும். ஒரு வகையான புல் ஊடுருவி விவசாயத்துக்கு அச்சுறுத்தலை விளைவித்து வருகின்றதாக தெரிய வருகின்றது.

இலங்கையில் தொட்டாச் சுருங்கி என்று அழைக்கப்படும் இனத்தை விடவும் சற்று பெரிதான 'பாதீனியம் இஸ்ரொபொரஸ்' எனும் விஞ்ஞானப் பெயரில் இப்புல் அழைக்கப்படுகிறது.

இவ் வகையான முற்றாக அழித்தொழிக்கும் முகமாக மக்களிற்கு விளக்கிக் கூறும் நிகழ்ச்சிகள் கடந்த 21ம் திகதி ஆரம்பமானது. இவ் ஊடுருவிப் புல்லினமானது இலங்கையில் வவுனியா, திருகோணமலை, தந்தகெற்றிய, மல்சிரிபுர, சூரியவெவ, பல்லேகல உள்ளிட்ட பகுதிகளில் காணப்படுவதாகத் தெரிய வருகிறது.

நாகர் கோவில் முகாம் .....

இராணுவத்தினர் தமது விநியோகங்களை மேற்கொள்கின்றனர்.

நாகர்கோவில் முகாமுக்கு வடக்கே கட்டற்புலிகள் தரையிறங்கினால் இந்த முகாம் முற்றுமுழுதாக சுற்றிவளைக்கப்பட்டுவிடும் என்பதால் அதைத் தடுக்க படையினர் பெரும் முயற்சிகளை மேற்கொள்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பயமும்பக்தியும்ஒருநாணயத்தின் இருபக்கங்களைப் போன்றது

(மருதமுனை நிருபர் சளீம் எம்.பதூர்டீன்) -வாணி விழாவில் மணிப்புலவர் உரை

எம் முன்னோர்கள் செய்த செயற் பாடுகள் யாவும் நன்கு சிந்தித்தால் இது கருத்தாழமிக்கதாகவே அமைந்துள்ளது. இளமைக் காலங்களில் இச்செயற்பாடுகளை நோக்கும் போது இதன் தாற் பரியங்கள் தெரிவதில்லை.முதுமை எம்மை எட்டிப் பிடிக்கும் வேளை சிந்தனையும் விரிவுபெறுவதனா லேயே பக்தியின் செயற்பாடுகள் எமக்குப் புரிகின்றன.

பயமும் பக்தியும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றது. ஒரு மனிதனுக்கு பயம் இருக்கும் போது நிச்சயம் அவனிடத்தில் பயமிருக்கின்றது. இதே போன்று பக்தி இருந்தால் அவனிடத்தில் பய்மிருக்கிறது. இந்த பயமும் பக்தியும் அவனது வாழ்வில் நேர்வழிகாட்டியாக அமைந்து அவனது வாழ்க்கை வழங்கொளிக்கச் செய்கின்றது. இந்தவாணி விழா இத்தகைய செய்ற்பாட்டிற்கு முன்னோடியாக அமைகின்றது என அண்மையில்கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற வாணிவிழாவின் போது வலயக் கல்விப் பணிப்பாளர் மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீட் அவர்கள் தனதுரையில் தெரிவித்தார்.

இவ் விழாவில் கலந்து கொண்டஸ்ரீமத்.சுவாமி அஜராத்மானந்தாஜி மகராஜ் தனதுரையில் உடல்,உடலுக்குள் உள்ளம்,உள்ளத்துக்கள் ஆத்மா இவை மூன்றும் வளம் பொருந்த வேண்டுமெனில் சரஸ்வதியின் அருள் வேண்டும். கல்வியில் மட்டுமல்ல இதரதுறையிலும் வெற்றி பெற்று வாழ்வில் வளம் பெறவும் வாணியின் அருள் வேண்டுமெனவும் கூறினார்.

இவ்விழாவிற்கு தலைமை வகித்த கலாசார உத்தியோகத்தர் திரு.பரதன் கந்தசாமி அவர்கள் தனதுரையில் வாணிக்கு வருடா வருடம் விழாவெடுப்பதன் மூலம் நாடும்,நாமும் அலுவலகமும் தூய்மைபெறுவதொடு இன ஐக்கியத்தையும் பேணுவதிலும் அதிக பங்களிப்பைச் செய்கிறது. இந்த வகையில் வாணியின் அருள் யாவருக்கும் கிடைக்க வேண்டும் எனக் கூறினார்.

இவ்விழாவில் மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்கே.ஆனந்தராஜா,உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. ஜெலீல்,திருமதி.ரி.தயாசீலன் ,திருமதி.எஸ்.எச்.எம்.எம்.ஏ.காதர், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அலுவலர்கள், கலந்து கொண்ட சிறப்பித்தனர். மேலும் உவெஸ்லி உயர்தர பாடசாலை மாணவர்களின் சரஸ்வதிபாடல்களும்,கார்மேல் பாத்திமா கல்லூரி மாணவி ரி.மாதுளா அவர்களின் பேச்சும் இடம் பெற்று ஆசிரிய ஆலோசகர் ரி.சங்கரலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் முடிவுற்றது.

2ம் பக்க தொடர்ச்சி

ஐ.நா.வில் ஒலித்த ஈழத்தமிழர்

(Myname is Krishna and i comefrom from the 2.5 million strong nation of Tamil Eelam lying between srilanlk&India. The srilanka Goverment contiuing a policy of genocide aimed at the destruction of our Tamil nayion)

என்ற அவரது உரை இன்றும் யதார்த்தமாக உள்ளது.

இத் தனிமனித சாதனையை தொடர்ந்து 'தமிழர் ஒருங்கிணைப்புக்குழு' (TCC-Tamil coordinating committe) இன் லன்டன் அமைப்பாளராக இவர் நியமிக்கப்பட்ட நிலையிலலே,31-08-1980 ல் நடை பெற்ற இக் குழுவின் அவசரக்கூட்டத்தில் 'தமிழ் ஈழத்தின் புதிய அரசாங்கம் 1982ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தில் உருவாகும்' என்ற பிரகடனம் நிறை வேறியமையும் 12-01-1982 செவ்வாய் இரவு லண்டன் பி.பி.சியின் 'தமிழோசை' செய்தியில் முற்கூட்டியே இது தொடர்பான செய்தி இடம்பெற்றமையும் இவ்விடத்தில் நினைவுபடுத்தத் தக்கது.

மேற்படித் தீர்மானம் நிறைவேறாத போதும் . எங்கு நிறைவேறவிருந்ததோ இதே அமேரிக்க நியுயோக் நகரில் ஐ.நா.தலமையகத்தின் முன் 1982 தைத்திருநாளில் டாக்டர் பஞ்சாட்சரம் தில்லையம்பலம் சகோதரர்கள் மற்றும் பெனடிக் போன்றோர் தலமையில் ஒருதலைப்பட்சமாக மேற்படிப் பிரகடனம் கைச்சாத்திடப்பட்டதாகவும் பின்னாளில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அமெரிக்காவின் 'மசாசூசெற்' மாநில அவையில் 'தமிழீழ ஆதரவு தீர்மானம் நிறைவேறவும் ,'சோமவில்லி' நகரின் 'தமிழீழ தினம்' அனுஸ்டிக்கப்படவும் தில்லையம் பலம் சகோதரர்கள் மற்றும் டாக்டர் பஞ்சாட்சரம் பென்டிக்ற் போன்ற தமிழின உணர்வாளர்கள் காரணமாயிருந்தனர். என்பனவும் மேற்போந்த தகவல்கள் தரும் செய்திகளாகும்.

இற்றைவரை ஐ.நா.சபையில் ஈழத்தமிழர் பிரச்சனையை பிரஸ் தாபித்த ஒரேயொரு அரச தலைவர் மொறிஷியஸ் பிரதமராக விளங்கிய ஜெகநாத் மட்டுமே ! 1983 செப்டெம்பரில் பொதுச்சபைக் கூட்டத்தொடரில் ஒரு மனிதாபிமானப் பிரச்சனையாக ஈழத்தமிழர் பிரச்சனையை தனது உரையில் வெளிப் படுத்தியிருந்தார் . பேரினவாதத்தால் தீக்கிரையான யாழ் பொது நூலகத்தை புதுப்பிப்பதற்காக ஆயிரம் அமெரிக்க டொலர்களை தமிழகக்கோயில்கள் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் முத்தையனிடம் மேற்படி மொறிஷியஸ் பிரதமர் கையளித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. 1983 கறுப்பு யூலை கலவரத்தை தொடர்ந்து அதிக கரிசனையை ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக காட்டிய அப்போதைய பாரதப் பிரதமர் இந்திராகாந்தியை அப்பிரச்சனையை, ஐ.நா.சபைக்கு கொண்டு செல்லுமாறு முதல்வர் மு.கருணாநிதி ஆலோசனை நல்கியிருந்தார் ஒரு தலைப்பட்சமாக சுதந்திரப்பிரகடனம் செய்த சைபிரியாவை எடுத்துக்காட்டாகக் கூறிஅது அவ்வளவு உசிதமாக அமையாது என்றும் இந்திரா அம்மையார் கூறியிருந்தார் பின்னாளில் பரவலாக எடுத்தாளப்பட்டிருந்தது.

1987 ம் ஆண்டில் இடம் பெற்ற ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடரிலும் ஈழத்தமிழர் விவகாரம் குழு நிலை விவாதங் களில்பிரஸ் தாபிக்கப்பட்டிருந்தது .இந்திய தரப்புப் பிரதிநிதிகளுள் ஒருவராகக் கலந்து கொண்டிருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசின் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஈழத்தமிழருக்காக அன்று குரல் கொடுத்தார்.

மிக அண்மைக்காலமாக ஐ.நா.அமைப்பில் ஏனைய கூட்டத்தொடர்களில் குறிப்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடர்களில் தமிழ்நாட்டு தமிழின உணர்வாளரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான திரு. வை.கோபால சாமி அவர்கள் ஈழத்தமிழரது தாயக விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் தமிழ்மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத அட்டுழியங்களையும் எடுத்துக் கூறிவருவது நாம் அறிந்ததே.

இத்தருணத்திலே 1976 செம்டம்பர் 30யில் ஐ.நா.வின் 31வது பொதுக்கூட்டத்தில் உருவாக்கிய உலகப் புகழ் பெற்ற அரச தலைவரின் உரையில் சில வரிகளை மீழ நினைவுட்டுவது சாலப்பொருத்தமானது.

"பார்க்க விரும்பாதவர் களுக்கு நாம் கண்களை கொடுக்க முடியாது கேட்க மறுப்பவர்களுக்கு காதுகளை கொடுக்க முடியாது உணர அறுப் பவர்களுக்கு இதயங்களை தர முடியாது ஆனால் மாறி வரும் புதிய உலகில் எங்கு நோக்கிலும் குறிப்பாக இளைஞர்களிடையே மனச்சாட்சியும் உணர்ச்சியும் தியாகமும் நிறைந்த புதிய புரட்சி உருவாகி வருகிறது.

நீண்ட காலம் உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு நாட்டில் சுதந்திரம் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல அதிகார பறிமுதலும் சட்ட விரோதமான ஆக்கிரமிப்பும் இன்றைக்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஒரு மக்கள் கூட்டத்தில் சுய நிர்ணய உரிமை பற்றியும் அந்த மக்களின் நாட்டு எல்லைகள் பற்றியும் பிரச்சினைகள் இருந்து வருகிறது."

மேற்படி உரை ஈழத்தமிழ் தேசிய உரிமைப்போராட்டத்தின் தார்மீகத்தை யதார்த்தத்தை எடுத்தியம்புவதாக அமைகிற போதும் அதற்கு உரித்துடையவர் மறைந்த உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமைக்குரித் தானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தாயிரமாம் ஆண்டின் இந்த ஆண்டு ஐ.நா.தினத்திலே தமிழர் தாயக உரிமைப் போராட்டத் தின்நியாயத்தை சர்வதேசப்படுத்தவும் , ஈழத்தமிழர் மீதான ஒட்டுமொத்த இன ஒடுக்கலுக்குக்கெதிராக ஓரணிப்பட்டு நிரந்தர கௌரவமான சமாதானத்திற்கு பணியாற்ற வரலாற்றைக் கற்றுணர்ந்தவர்களாக தமிழக்கட்சிகள் தம்மைத் திருத்திக்கொள்வதும் பூமிப்பந்தில் புதிய தேசத்தவர்களாய் நாளை யேனும் நம்மவர்களை நிமிரச் செய்யும் என்பதே அவதானிகளின் கருத்தாகிறது !

ஐ.தே.க செயற்குழு ஆதரிக்கிறது

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நடை பெற்று வரும் பேச்சு வார்த்தையை ஐ.தே.கட்சியின் செயற்குழு முன்றாக ஆதரிக்கிறதாக தெரிவித்துள்ளனர்.

நேற்று ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைச் செயலகமாகிய சிரிகொத்தாவில் நேற்றுக் காலை கூடிய செயற்குழு மேலும் விரிவான முறையில் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு பூரண சம்மதத்தைத் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக பொதுவான இணக்கப்பாட்டை அடைவதற்கு பாராளுமன்றத்தில் பிரதி நிதித்துவம் பெற்றுள்ள ஏனைய கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் எனவும் செயற்குழு கருத்து வெளியிட்டது.

"காற்றுக்கென்ன வேலி"

திரைப்படத்திற்கு சான்றிதழ் மறுப்பைக் கண்டித்து உண்ணாவிரதம்.

சென்னை அக்டோபர் 23-

"காற்றுக்கென்ன வேலி" திரைப்படத்துக்கு சான்றிதழ் வழங்காமல் இழுத்தடிப்பதாகக் கண்டனம் தெரிவித்து தென் இந்திய வர்த்தக சங்க வளாகத்தில் இந்த உண்ணாவிரதம் நடை பெற்றது.படத்தின் இயக்குநர் புகழேந்தி, தயாரிப்பாளர் வெள்ளையன், நடிகர் சிறீமான், நடிகர் சக்திகுமார் உள்ளிட்ட படத்தில் பங்கு பெற்ற கலைஞர்கள் அனைவரும் இந்த உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

தாய் மூவிமேக்கர்ஸ் சார்பில் த. வெள்ளையன் தயாரிக்கும் படம் "காற்றுக்கென்ன வேலி" .இளையராஜா இசை அமைப்பில் புகழேந்தி இயக்கியுள்ள படம் இது.

இராணுவ சீருடையில் பலத்த காயங்களுடன் வடக்கில் இருந்து 18 வயது பெண் ஒருவர் சிகிச்சைக்காக தமிழ்நாட்டுக்கு வருகிறார். நாகைக்கு வந்து சேரும் அவருகு சிகிச்சை அளிக்க மறுக்கும் மருத்துவர், கடைசியில் உயிருக்குப் போராடும். அந்தப் பெண்ணைக் காப்பாற்ற சிகிச்சை அளிக்கிறார்.

இடையில் அவர்களுக்குள் காதல் உருவாகிறது. அதனால் சிகிச்சை அளிக்கும் மருத்துவர், பல்வேறு சித்ரவதைகளுக்கு உட்படுத்தப்படுகிறார். இதனால் மனம் நொந்து போன அந்தப் பெண், மருத்துவருக்கு நேர்ந்தக் கொடுமைகளை எண்ணி தாயகம் திரும்ப நினைக்கிறார். இந்த மனித நேய உணர்வுகளைத் தான் காற்றுக்கென்ன வேலியில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

ஆனால், தணிக்கை குழு படத்தைப் பார்த்துவிட்டு சான்றிதழ் தர மறுத்துவிட்டது. இது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான படம் என்றும் இந்திய இலங்கை உறவைப் பாதிக்கும் என்றும் அதற்கு காரணம் சொல்லப்பட்டது.

அதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று எடுத்துக்கூறியும் ஏற்க மறுத்துவிட்டார்கள். இதைத் தொடர்ந்து ஜூன் 23-ஆம் தேதி மறுபரிசீலனை - (ரிவைசிங்) கமிட்டிக்கு படம் அனுப்பப்பட்டது. சில உறுப்பினர்கள் இந்த திரைப்படத்தை அனுமதித்தாக வேண்டும் என்றும், வேறு சிலர் எதிர்நிலையாகவும் கருத்து தெரிவிக்கின்றனர். இதனால் தணிக்கைக்குழுவின் மும்பை அலுவலகத்திற்கு உறுப்பினர்களின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

பிறந்த திகதி தரும்யோகம்.

ஜோதிடம் யூன் - 04

யூன் 4-13-22ந் தேதியில் பிறந்தவர்களின் பலன்கள்:- எண் **4** அதன் அதிபதி **ராகு**

எதிர்பாராத நிலையில் பல நன்மைகளைப் பெறுவீர்கள். தனித்தன்மை பெற்றவர்கள். எதிலும் புதுமையைச் செய்ய விரும்புவீர்கள்.சமுதாய முன்னேற்றத்துக்காக பல புதிய கொள்கைகளை உருவாக்குபவர்கள். மின்சாரம், தொலைக்காட்சி. ஜோதிடம், மனோதத்துவம், ஆகாய விமானம், கணனி இவற்றில் ஆராய்ச்சி செய்யும் மனோதிடம் பெற்றவர்கள்.

ஆன்மீகத்துறையில் பல புதுக் கொள்கைகளையும், மக்களின் முன்னேற்றத்துக்காக புதுமைகளைச் செய்வதிலும் ஆர்வம் கொண்டவர்கள்.

திருமணத்தில் தனது கருத்துக்கு ஒத்தகருத்து உடைய வராக அமைந்தால்தான் திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும். இல்லையேல் கருத்து வேற்றுமை ஏற்படும். அதனால் காதல் திருமணமே உங்களுக்கு ஏற்றதாகும். அரசாங்கத்திலும் பணிபுரிவீர்கள்.புலமைபெற்ற ஆசிரியர்களாகவும் பணியாற்றுவீர்கள். உறவுகளின் உதவி குறைவு. சுதந்திரத்தன்மை யுடையவர்கள். எனவே மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பு கொடுக்கமாட்டீர்கள். அதனால் அவர்களுடன் கருத்து வேறுபாடுதான் ஏற்படும்.

அதிர்ஷ்டலாபச் சீட்டு நன்மை தராது. கற்பனை வளமிக்க பேச்சாளராகவும் இருப்பீர்கள். வலிமையான உடலமைப்பு உடையவர்கள். கண்டுபிடிக்க முடியாதநோய்களால் தொல்லையும் ஏற்படும். சிறிது மது அருந்தினால் என்ன என்ற எண்ணமும் ஏற்படும். ஆனால் அது பிற்காலத்தில் பாதிப்பையும் உடல் நலக்கோளாறையும் தரும். அதனால் மதுவை மறப்பதே நன்று.

4-5-13-14-22-23-31-ம் தேதிகள் எந்த மாதம் எந்த ஆண்டானாலும் யோகம் தருபவைகளே . உங்களது வாழ்க்கையில் 4-5-13-14-22-23-31-32-40-41-49-50-59-67-68-76-77ம் வயதுகளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடைபெறும்.

4-5-13-14-22-23-31ம் தேதியில் பிறந்தவர்களின் உறவும் துணையும் என்றும் உதவியாகவும், நன்மையாகவும் அமையும்.

வர்ணம்:- வெளிர் நீலம் அல்லது நீலக்கோடுகள் போட்ட துணிகளே மனதைக்கவரும். பரிசுத்தமான மனமுடையவர்கள் . எனவே நீலத்தையே அதிகம் விரும்பினாலும்,மிக்க அதிர்ஷ்டமான வர்ணம் மஞ்சளே.

இரத்தினம்:- கோமேதகம், சுண்ணாம்புச் சத்தும், அலுமினியம் போன்ற ரசாயனக் கலவை. இக்கல்லினை உடலில் அணிந்தால் வாதம், பித்தம், ஈரல் வலி, குடல் வலி, இரத்தப்புற்று, ஆஸ்மா, குஷ்டம், நரம்பு வியாதிகளைக் குணமாக்கி அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும்.நீலநிறக்கல்லும் நன்மை தரும்.

வே. தவராசா

01-10-2000 தொடக்கம் டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்கில் அருட் தந்தை யோசப்மேரி சுவாமி அவர்களின் தலைமையில் பங்குகளான வேலூர் கொளனி, கல்லடி. டச்பார் நாவலடி ஆகிய பகுதிகளில் வீடு வீடாக மாதாவை ஊர்வலமாக எடுத்துச் சென்று வீடுகளிலே செபமாலை, திருப்பலிப்பூசை ஆகியன நடைபெறுகிறது. பங்கின் அருட் தந்தை யோசப் மேரி சுவாமிகளின் வருகையால் டச்பார் இஞ்ஞாசியார் ஆலயம் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றது. அன்னை மரியாயின் ஊர்வலத்தையே மேலே உள்ள படத்தில் காண்கின்றீர்கள். அன்னை மரியாயின் வணக்கத்துக்குரிய மாதம் இம்மாதம் ஆகையால் 31.10.2000 வரை இவ் ஊர்வலம் நடைபெறும்.

(படமும் செய்தியும் செ. நிகில்ராஜ்)

அல்லாஹ்வை சந்தித்து உரையாடிய அற்புதப்பயணம் - புனித மி.ஃ.றாஜ்

அல் இஸ்ரா (நடு நிசிப் பிரயாணம்).அல்மி.ஃ.றாஜ்(விண்ணுலக யாத்திரை) எனப்படும். இச் சம்பவங்கள் ஹிஜ்ரத்துக்கு முன் சுமார் பதினாறு மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்தன. "அல் இஸ்ரா" என்பது மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹறாமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா என்னும் பள்ளிவாயல் வரை நபி(ஸல்) அவர்கள் சென்றதையும், "அல்மி.ஃ.றாஜ்" என்பது அதே இரவில் ஏழு வானங்களையும் கடந்து சென்று அல்லாஹ்வை தரிசித்ததோடு. வேறு பல காட்சிகளைக்கண்டு திரும்பியதையும் குறிக்கும்.

இந்த யாத்திரை ஸ்தூல சரீரத்துடனா, அல்லது ஸரிஷ்மும் ஆவி மட்டுமா என்பதையிட்டு சரித்திர ஆசிரியர்களுக்கிடையில் அபிப்பிராயபேதங்கள் நிலவுகின்றன. இரண்டும் சேர்ந்தே இவ்யாத்திரை நிகழ்ந்தது என்பதே சரியாகும். இது நடக்க முடியாத ஒரு விஷயமல்ல என்பது நன்கு ஆராய்ச்சி செய்பவர்களுக்கு விளங்கும். நபியல்லாத சாதாரண விஞ்ஞானியே இன்று சந்திர மண்டலத்திற்குச்சென்று வருகின்றான். எண்ணற்ற ரிஷிகளும், ஞானிகளும் விலாயத்துள்ள நாதாக்களும் ஆகாயத்தில் பிறக்கின்றனர். "நான்" என்னும் அன்னியத்தைஅழித்து அல்லாஹ்வின் வுஜூதை ஒன்றுபடுத்திய ஒருமேதாவி,சில படிகளைக்கடந்து ஒரே நேரத்தில் எத்தனையோ இடத்தில் நிற்கிறார் என்பதை நாம் அறிவோம். மேலும் அந்த வலிய்யானவர் தனது ஸ்தூல் சரீரம் மற்றவர் கண்ணுக்குத் தெரியாதமுறையில் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் சென்று சில நிமிடங்களில் திரும்புவதையும், கண்டிப்பான வஸ்துக்களை ஊடறுத்து அவர் செல்வதையும் நாம் அறிவோம். விஷயம் இங்ஙனமிருக்க அந்த வலிமார், குத்புமார் பின்பற்றுகின்ற அந்த றஸதுலுள்ளாஹ் ஏன் வானங்களை ஊடறுத்து செல்ல முடியாது?

இந்த மஜ.ஃ.றாஜின் போது புறாக்கின் மீது அதன் சோபன வாழ்த்துக்களுடன் அவர்கள் அதன் மேல் ஏறி விண்ணுலகம் சென்ற வேளையில் அமரர்கள் சோபன வாழ்த்துக்கள் கூறி வரவேற்றனர். அதே போன்று நபி மார்களும் அண்ணலாரை வரவேற்று மகிழ்ந்தனர். பின்னர்



நபி மார்களின் வேண்டுகோளின் படி இமாமாக நின்று தொழுகை நடாத்தினார்கள். அதன் பின்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு பின் வருமாறு அறிவுரை கூறினார் கள். அல்லாஹ்வை சந்திக்கச் செல்லும் நீங்கள் அர்ஷைத்தொட்டு பிடித்த வண்ணம் அல்லாஹ் அளவில் உருக்கமாக உரையா டுவீர்களாக. தூதின்றி நேருக்கு நேர் அல்லாஹ் உங்களுக்கு அறிவிக்கும் அரிய பாரதூரமான அறிவிப்புக்களை

அகிலத்தின் பேரொளி அண்ணல் நபி(ஸல்) அவர்கள் புனித "மி.ஃ.றாஜ்" பயணம் மேற்கொண்டதை நினைவு கூறு முகமாக இன்றிரவு காத்தான்குடி பத்ரிய்யஹ் ஜும்மா பள்ளி வாயலில் நடைபெறும் புனித புஹாரீ - மி.ஃ.றாஜ் கந்தூரியை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

காது தாழ்த்தி கேட்பீராக.

அவர்களிடம் இருந்து விடைபெற்ற நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனது நாயனை காணும் ஆவலுடன் தனித்து நடந்தார்கள். அப்பால் இவர்களை போற்றி

போஷிக்கும் நாயனில் நின்றும் "எனது ஹபீபே, முடுகி வாரும். என்ற உத்தரவு வந்தது. அவர்கள் முடுகினார்கள். அல்லாஹ் அவர்களை தன்னளவில் மிகவும் நெருங்கி முடுகச் செய்து வருமாறு வரவேற்பு அளித்தான்.எனது ஹபீபே தயக்கம் ஏதுமின்றி எனது அர்ஷில் ஏறும். உமது அந்தஸ்து என்னிடம் விஷேசமுற அமைந்துள்ளது. எனவே நீர் விரும்பியதைக் கேளும் என அல்லாஹ் அண்ணலாரு க்கு அன்புக் கட்டளையிட்டான். மேலும் "எனது ஹபீபே, உம்முடைய ஜோதி நம்முடைய ஜோதியிலிருந்து ஆக்கப்பெற்று பிரகாசித்து ஜொலிக்கின்றது. எனவே நீர் நாடியதைக் கேளும். நம்முடன் பேசுவதற்கு எத்தகைய தயக்கமும் வேண்டாம். நேசமுடைய முஹிப்பும். மஹ்பூபும் தான் இங்கு தனித்து உள்ளோம். இந்த ஆபூர்வ சந்தர்ப்பத்தில் நம்முடன் மருகுதல் ஆபூர்வ சந்தர்ப்பத்தில் நம்முடன் மருகுதல் பெற்றிருப்பீராக" என அல்லாஹ் கூறினான்.

மேலும் அல்லாஹ் அண்ணலாரைப்பார்த்து பின்வருமாறு கூறினான

"எனதூ ஹபீபே நீர் கேட்டதெல்லாமே உமக்குத் தந்தோம். இன்னமும் மேற்கொண்டு கேட்பீராயின் நாம் மேலும் தர சித்தமாக இருக்கிறோம். எனவே உமக்கு விருப்பமானவற்றை தாராளமாகக் கேளும். மீண்டும், மீண்டும் கேளும் என்னுடைய தியானத்தை உம்மோடு ஒட்டிச் சேர்ந்த தன்மையில் நிலைபடுத்திக் கொள்ளும் எனக் கூறினான்.

இவ்வண்ணம் கேட்டதெல்லாம் கிடைக்கப் பெற்றவராக பரிபூரண அமைதியுடன் எம் பெருமானார் (ஸல்) அவர்கள் மண்ணுலகம் திரும்பினார்கள். குறிப்பாக இவ் விண்ணுலக யாத்திரையின் போது தான் புனித தொழுகை எம் பெருமானாருக்கு பரிசாக வழங்கப்பட்டது. இத் தொழுகையை நாம் பேணுதலாக தொழுது வரவேண்டியது எமது கட்டாயக் கடமையாகும்.

முத்தமிழ் விழா பிற்போடப்பட்டது

(நமது நிருபர்)

மண்முனை வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை நடாத்த இருந்த முத்தமிழ் விழா தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டிருப்பதாக மண்முனை வடக்குப் பிரதேசச் செயலாளர் கே. கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விழா எதிர்வரும் சனிக்கிழமை(28-10-2000) அன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிறந்தநாள் வாழ்த்து

ஸரா நிஷோர்த்தனா

கல்லடி டச்பாரைச் சேர்ந்த நிகில்ராஜ் கிஷாந்தி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி நிகில்ராஜ் ஸரா நிஷோர்த்தனா தனது 4வது பிறந்த நாளை தனது வீட்டில் (24-10-2000) இன்று கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமி மார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அண்ணிமார், தொட்டப்பா, தொட்டம்மா, அக்காமார், மச்சாள்மார், மச்சான் மார் மற்றும் டச்பாரிலி ருக்கும் பாட்டன், பாட்டி, அம்மம்மா மார்,அப்பப்பா, கொழும்பிலிருக்கும் சிஸ்ரர் அம்மம்மா, நுவரெலியாவிலிருக்கும் அப்பப்பா, அம்மம்மா, ஜேர்மனியிலிருக்கும் அப்பப்பா, அம்மம்மா, இந்தியாவிலிருக்கும் அப்பப்பா, அம்மம்மாமார், சித்தி மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

செல்வராஜா நிகில்ராஜ்
161/24, ''நிஷோ இல்லம்''
நலன்புரிச்சங்க வீதி. டச்பார்.

Adv.

வீடியோக் கலாசாரத்தின் பெருக்கத்தால் மாணவர்கள் கல்வியை இழக்கின்றனர் !

(வந்தாறுமூலை நிருபர்)

இன்றைய மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கும் தன்மை மிகவும் குறைவாக இருக்கின்றது மாணவர்கள் ஆசிரியர்களை மதித்துக் நடாத்தும் வண்ணமே அவர்கள் சிறப்பு அடைவது மட்டுமன்றி சமுதாயத்திலும் நன்கு மதிக்க கூடியவர்களாக மாறுகின்றார்கள் என்று தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயத்தில் நடைபெற்ற 125வது ஆண்டு நிறைவு விழாவில் அதிதியாக கலந்து கொண்ட கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானத்துறையின் தலைவர் வேலுப்பிள்ளை குணரெத்தினம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் மாணவர்கள் கல்வி மட்டத்தில் பாதிக்கப்படுவதற்கு பல காரணங்கள் உண்டு உதாரணமாக மட்டுக்களப்பு நகரினை எடுத்துக்கொண்டால் 20 வீடியோக் கடைகள் அண்ணளவாக இருக்கின்றது அதில் ஒவ்வொரு கடைகளிலும் தலா 30 படக்கொப்பிகள் மக்கள் பெறுகின்றபோது. நாளாந்தம் 600 கொப்பிகள் எடுக்கப்படுகின்றது. இதில் குடும்பத்தில் ஐந்து பேர் பார்ப்பதன் மூலம் மொத்தமாக 3000 பேர் இரவுவேளைகளில் வீடியோப் படம் பார்ப்பதன் மூலம் அக்குடும்பத்திலுள்ள மாணவர்கள் அன்றைய பாடத்தை தவற விடுகின்றனர்.

அத்துடன் மாணவர்கள் கல்வி கற்றலுக்கு அப்பால் பேச்சுப் போட்டி எழுத்து. விளையாட்டு போன்ற பாடப்புறச் செயற்பாடுகளில் பங்கு பற்றுவது மிகவும் குறைவு காரணம் படிப்பதற்கு இவைகள் தடையென அவர்கள் கருதுவதாகும்.

இவை படிப்பை செப்பனிடுவதற்கும், ஆளுமை வளர்ப்பதற்கும் அவசியமென்பதை ஒவ்வொரு மாணவனும் உணரவேண்டும். எனக் கூறியதுடன் நோமை என்பது மாணவர்களிடம் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. இதற்கு தனியார் வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்வதும் ஒரு காரணமாகும் ஆனால் தனியார் வகுப்புக் கல்வி மாணவர்களின் மத்தியில் குறுகிய காலத்தில் ஒருவகையில் தினிக்கப்படுகின்றது.

பரீட்சை முடியதான் கற்ற கல்வியை மறந்து விடுகின்றனர்.

இது எவ்வாறு அமைவதென்றால் ஒரு ரீயூப்புக்கு காத்திருந்த பின்னர். அதைத் திறந்துவிடுவது போல அமைந்து விடுகின்றது.

அதுமாத்திரமல்லாமல் மாணவர்களின் எதிர்காலமும் முன்பள்ளியிலும் அமைந்து இருக்கின்றது. ஆனால் இலங்கையில் முன்பள்ளி கற்கை வளர்ச்சி இல்லை.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலக் கல்விப் பணிப்பாளர் ஆர். மாணிக்க ராஜா கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் ஏ.எல். அலக்சாண்டர் தலைமை தாங்கியதுடன் பின்பு மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

தொண்டர் ஆசிரியர் நியமனம் பெயர்ப் பட்டியல் வெளியீடு

(மூதூர் நிருபர் அனஸ்)

இரண்டாம் கட்ட தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்கான பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இன்னும் இருவாரங்களில் நியமனங்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

கிண்ணியா 17, மூதூர் 15, ஈச்சிலம்பற்று 08 என மொத்தம் 40 தொண்டர் ஆசிரியர்கள் ஏ, பட்டியலில் இருந்து கடந்த ஆகஸ்ட் 15இல் நியமிக்கப்பட்டு செப்டம்பர் 20 இல் கடமை ஏற்றுக்கொண்டனர்.

பி, பட்டியல் மூதூர் 30. ஈச்சிலம்பற்று 11, கிண்ணியா 04 என மொத்தம் 45 தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் மூதூர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு கடந்த திங்கட் கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நியமனத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட 444 பேர்களில் இனவிகிதாசார அடிப்படையில் மேல் முறையீட்டுக் குழுவின் முடிவிற்கமையவே இந்த 5 தொண்டர் ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் சிறுபான்மையினர் ஏழுபேர்

(மூதூர் நிருபர் அனஸ்)

புதிய அமைச்சரவையில் சிறுபாண்மையினர் ஏழுபேர் இடம் பெற்றுள்ளனர். கடந்த அமைச்சரசையில் ஐவர் மட்டுமே இடம் பெற்றிருந்தனர்.

லக்ஷமன் கதிர்காமர் ஆறுமுகம் தொண்டமான் ஏ.எச்.எம். பௌளசி அலவிமௌலான எம்.எச்.எம். அஷ்ரப் ஆகியோர் முன்னாள் சிறுபான்மையின் அமைச்சர்களாவர். புதிய அமைச்சரவையில் புதுமுகங்களான சிறுபான்மையினத்தைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா றவூப் ஹக்கீம் ஆகியோர் முதல் முஸ்லிம் பெண் அமைச்சராக திருமதி. பேரியஸ், அஸ்ரப் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். கடந்த வியாழன் அன்று நியமிக்கப்பட்ட அமைச்சரவையில் 44 பேர் இடம் பெற்றள்ளதுடன் 42 பேர் ஜனாதிபதி முன் னிலையிலும் திருமதி பேரியஸ் அஷ்ரப் திட்ட அமுலாக்கல் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி முன்னிலையிலும் பதவிப்பிரமாணம் செய்துள்ளனர்.

இந்த அமைச்சரவையில் 10 பிரதி அமைச்சர்களும் 6 பாராளுமன்ற உறுப்பினர்களும் புதுமுகங்களாக இடம் பெற்றுள்ளனர். சிசில் பிரேம ஜெயந்த, வெள்ளி குணவர்தன, திருமதி பேரியஸ் அஸ்ரப் ஆகியோர் பாராளுமன்றத்திற்கும் புதியவர்கள் என்பதுடன் ஐவருக்கு மட்டுமே முன்னைய அமைச்சுப் பொறுப்புக்கள் மீள வழங்கப்பட்டுள்ளன.

மேலும் முன்னர். 40 ஆக இருந்த அமைச்சரவை இம்முறை 44 ஆக ஆதிகரிக்கப் பட்டுள்ளதுடன் விஜயபால மென்டிஸ் இலாகா இல்லாத அமைச்சராகவும் நியமிக்க பட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா

(மூதூர் நிருபர் அனஸ்)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சு ஆண்டு தோறும் தமிழ் இலக்கிய விழாவினை மிகச் சிறப்பாக நடாத்திவருகின்றது.

இவ்வாண்டுக்கான விழா நவம்பர் 03ம்,04,05ம் திகதிகளில் திருகோணமலைப் புனித மரியாள் மகளீர் கல்லூரி மண்டபத்தி நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மாகாணக் கல்விச் செயலாளர் கே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விழாவின் சிறப்பம் சமாக கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட ஆய்வரங்கு தொடர்பான நூல் ஒன்றும் வேறு இருவகையான இலக்கிய நூல்களும் இவ்விழாவின் போது வெளியிடு வதற்கான ஏற்பாடு களும் செய்யபட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.



காத்தான்குடி ப.நோ.கூ. சங்க இயக்குனர் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வெளியிட்ட 31/99 சுற்று நிருபத்தின் பிரகாரம் சங்க தலைவர் எஸ்.எல்.ஏ.க.பூர் (ஜே.பி) • பணியாளர்க்கான ஆறு மாதகால மீதி சம்பளத்தையும் நிரந்தர நியமன கடிதத்தினை சங்க கிளை முகாமையாளர் எம்.சீ.எஸ். அன்சாருக்கு வழங்கிவைப்பதையும் சங்க இயக்குனர் சபை உறுப்பினர்கள் அருகாமையில் நிற்பதையும் இப்படத்தில் காணலாம்.

கண்டி சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் கண்டனம் !

(நமது நிருபர்)

ஒரு நாட்டின் பலதரப்பட்ட மக்களினதும் பிரதேசத்தினதும் எழிச்சிக்கும் உயர்ச்சிக்கும் வழிகாணும் ஒரு குரலாகவே ஊடகத்துறையினர் செயற் படுன்றனர்.

யாழ் சுதந்திர ஊடக வியலாளர் நிமலராஜனின் படுகொலையானது ஜனநாயக ரீதியிலான உண்மை, நேர்மை நீதிக்காகப் போராடும் சுதந்திரஊடக வியலாளருக்கு விடுக்கபட்ட அச்சுறுத்தலாகும்

இவ்வாறு கண்டி சுதந்திர பத்திரிகையாளர் சங்கத்தின் கண்டன அறிக்கையில் தெரிவிக்க பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது உண்மைகளை கசப்பாகக் கருதி சிறந்த துணிந்த நேர்மையான ஊடகவியலாளரை துப்பாக்கி கைக்குண்டு போன்ற ஆயுத கலாசாரங்களால் அழித்தொழிக்கும் கயவர்களை கண்டறிந்து புதிய தண்டனைகளை வழங்க அரசு முன் வரவேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இருவாரங்களில் விசாரணை அறிக்கை

(கொழும்பு)

அஷ்ரப் பயணம் செய்த ஹெலி விபத்து தொடர்பாக அமெரிக்க நிபுணர்கள் மேற்கொண்ட விசாரணை அறிக்கை அடுத்த இரு வாரங்களில் கிடைக்கும் என இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஹெலி விபத்துக் குறித்து உடனடியாகக் கருத்து எதனையும் அமெரிக்க நிபுணர்கள் தெரிவிக்கவில்லை. இதேநேரம் விபத்துக் குறித்து சோதனைகளையும் விசாரணைகளையும் மேற்கொண்ட இலங்கை விமானப்படை தலமை அதிகாரி டி.சீ பெரேரா தலமையிலான மூன்று சிரேஸ்ட அதிகாரிகள் இது காலநிலை சீரற்ற காரணத்தினால் ஏற்பட்ட சாதாரண விபத்தாக இருக்கலாம் எனக் கருத்து தெரிவித்துள்ளனர்.

பஸ்சேவையை விரிவுபடுத்த ஜோசப் எம்.பி. கோரிக்கை

(வேதாந்தி)

மட்டக்களப்பு ஈஸ்ரன் பஸ் கம்பனியினால் நடாத்தப்படும் கரவெட்டியில் இருந்து மணற்பிட்டி வரையிலான பஸ் சேவையை முதலைக்குடா வரை விரிவுபடுத்து மாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப் பதிகாரி சக்கியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக இராணுவ அதிகாரி சக்கி ஜோசப் எம்பியிடம் தெரிவித்ததாக தெரியவருகின்றது.

புலமைப் பரீட்சையில் சித்தி

வந்தாறுமூலை கணேச வித்தியாலயத்தில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கோணேசப்பிள்ளை மலர்வதனி 139புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தள்ளார்.

(நல்லரெட்ணம்)

உடனடி விற்பனைக்கு வீடும், காணியும்

இல. 15, மேல்மாடித் தெரு சிங்களவாடியில் 22 பேச்சர்ஸ் காணியுடன் வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு

தொடர்பு :
ஞா. விவேகானந்தன்
69, செல்வநாயகம் வீதி
மட்டக்களப்பு.
தொ. பே : 065 - 23467

(ADVT) 22597

சாஜா கொகாகோலா கிண்ணம்

தொகுப்பு : ஜெப்ரி

கடந்த 20ஆம் திகதி அன்று சார்ஜாவில் நடைபெற்ற முதலாவது கிரிக்கட் போட்டியில் ஆடிய இந்திய இலங்கை அணிகள் முறையே 224, 225 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியின் போது இந்திய அணியின் சார்பில் சச்சின் டெண்டுல்கர் சிறப்பாக ஆடி 101 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரன் அவுட் முறையில் ஆட்டம் இழந்தார்.

இப்போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது இலங்கை சார்பாக ரசல் ஆனால்ட் 59 ஓட்டங்களையும் பெற்றார். இப்போட்டியில்முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் 8 விக்கற்றுக்கள் இழப்பிற்கு 224 ஓட்டங்களைப். பெற்றது.

இதைத் தொடர்ந்து இரண்டாவதாக துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை அணியினர் 43.5 ஓவர்களில் ஐந்து விக்கட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில் இலங்கை வெற்றி பெறுவதற்கு துணையாக இருந்தது, இலங்கை அணியின் பந்துத் தடுப்பு எனக் குறிப்பிடலாம். ஏனெனில் இப்போட்டியில் நான்கு வீரர்களை ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்கச் செய்ததே ஆகும்.

அடுத்ததாக 21ம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இலங்கை. சிம்பாவே அணிகளிற்கு இடையிலான போட்டியில் இலங்கை வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய சிம்பாவே அணியினர் 4 விக்கற்றுக்களை இழந்து 50 ஓவர்களில் 224 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டியில் சிம்பாவே சார்பாக அண்டி பிளவர் 120 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதுடன், வெல்ஜோன் 63 ஓட்டங்களையும் பெற்றார்.

இலங்கை அணியின் சார்பாக சனத் ஜெயசூரிய 78 ஓட்டங்களையும், மார்வன் அத்தபத்து 90 ஓட்டங்களையும் பெற்று இலங்கை அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். இதையடுத்து இலங்கை அணியினர் 47 ஓவர்களில் 225 ஓட்டங்களை மூன்று விக்கற் இழப்பிற்குப் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து மறுதினம் நடைபெற்ற சிம்பாவே, இந்தியா அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்திய அணி 13 ஓட்டங்களால் சிம்பாவே அணியை தேற்கடித்தது. இந்தியா 8 விக்கற் இழப்பிற்கு 50 ஓவர்களில் 265 ஓட்டங்களையும், சிம்பாவே 50 ஓவர்களில் 252 ஓட்டங்களையும் பெற்றது.

இம் முடிவுகளைத் தொடர்ந்து முக்கோண கிரிக்கட் சுற்றுப் போட்டிகளில் முதல் சுற்று நிறைவடைந்த நிலையில் இலங்கை அணி முன்னணியில் திகழ்கிறது.

கொகாகோலா கிண்ணத்திற்கான இச் சுற்றுப் போட்டிகளில் 4 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் திகழும் இலங்கை அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருக்கும் இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இந்நிலையில் 2 புள்ளிகளைப் பெற்று இந்தியா இரண்டாம் இடத்திலும் எந்தவிதப் புள்ளிகளையும் பெறாத நிலையில் சிம்பாபேயும் இருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிக்காகோவில் மரதன் ஓட்டம்

(சிக்காகோ)

சிக்காகோவில் நேற்று நடைபெற்ற சிக்காகோ மரதன் ஓட்டப்போட்டியில் ஆண்கள் தரப்பில் அமெரிக்க வீரர் கானில் காமுச்சியும், பெண்கள் தரப்பில் கென்ய வீராங்கனை கெதலின் டெபோராவும் வெற்றி பெற்றனர்.

ஆண்களிற்கான மரதன் ஓட்டப்போட்டியில் 2:07:01 இல் போட்டியை முடிவுசெய்து காமுச்சி புதிய அமெரிக்க சாதனையை நிலைநாட்டினார். இப்போட்டியில் கென்ய வீரர்கள் ஐவர் இரண்டாம் இடத்தில் இருந்து ஆறாம் இடம் வரை பெற்றது சிறப்பம்சமாகும்.

பெண்களிற்கான போட்டியில் கென்யா மற்றும் ரஷ்ய வீரர்கள் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

மூளையில் இரத்தக் கசிவு

மெக்சிக்கன் நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மைக்டைசனுடனான குத்துச்சண்டைப் போட்டியில் பலத்த தாக்குதலிற்கு இலக்கான குத்துச்சண்டை வீரர் அன்ரு கொலோட்டா தற்போது சிக்காக்கோவில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த குத்துச்சண்டைப் போட்டியில் தாக்குதலிற்கு இலக்காகிய அன்ரு கொலோட்டாவின் மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளதாக தமது பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

தனக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டுள்ளதாகவும், மயக்கம் மற்றும் வாந்தி எடுக்க வேண்டும் எனும் உணர்வு ஏற்படுவதாகவும் கொலோட்டா தனது பிரதி நிதியிடம் தெரிவித்ததைத் அடுத்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் இந்தியாவுக்காக துடுப்பாடிக் கொண்டிருந்த ரொபின் சிங் பந்தை ''சுவீப்'' முறையில் அடித்த போது அதை இலங்கை அணியின் விக்கட் காப்பாளர் றொமேஸ் களுவித்தாரன பார்த்துக் கொண்டு நிற்கிறார்.

டெனிஸ் வலம்

டபிள்யூ .ரீ.ஏ. டெனிஸ் சுற்றுப்போட்டி

(ஒஸ்ரியா)

ஒஸ்ரியாவில் நடைபெற்ற 535000 அமெரிக்க டொலர் பணப் பரிசிற்கான டபிள்யூ.ரீ.ஏ.டெனிஸ் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த லின்சி டெவன் போட் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் அதே நாட்டைச் சேர்ந்த வீனஸ் வில்லியமை 6-4, 3-6, 6-2 என்ற புள்ளிகளின் அடிப் படையிலேயே தோற்கடித்துள்ளார்.

சங்காய் ஓபன்

இதே வேளை சங்காயில் இடம் பெற்ற 375000 அமெரிக்க டொலர் பணப்பரிசிற்கான சங்காய் ஓபன் ரெனிஸ் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சுவீடனைச் சேர்ந்த மெக்னஸ் வெற்றி பெற்றுள்ளார்

இவர் தன்னுடன் போட்டியிட்ட நெதர்லாந்தைச் சேர்ந்த செயங்கை 6-4, 4-6, 6-4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தோற்கடித்துள்ளார்.

ஓவர்களுக்கு இடையே பந்தை மாற்ற அனுமதி

(சார்ஜா)

பகலிரவு கிரிக்கட் போட்டிகளின் போது 35-45 ஓவர்களின் இடையே பந்தை மாற்றுவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சார்ஜாவில் நடைபெற்று வரும் கொக்காகோலா வெற்றிக் கிண்ணத்திற்கான முக்கோணக் கிரிக்கட் போட்டித் தொடரில் இரவில் ஏற்படும் பனி காரணமாக பந்து சற்று வழுக்கும் சுபாவம் பெறுவதாகவும், இதனால் பந்தைக் கையாழுவதுகடினமாக இருப்பதாகவும் இரண்டவாதாக பந்து வீசிய அனைத்து அணிகளும் முறைப்பாடு செய்துள்ளன.

இவ்வாறு ஏற்படுவதனால் இதனைக் கருத்திற் கொண்டு போட்டி நடுவர்கள் இனிவரும் போட்டிகளில் 35 இற்கும் 45 இற்கும் இடைப்பட்ட ஓவர்களிற்குள் பந்தை மாற்றுவதாகவும் உத்தேசித்துள்ளனர்.

வாசகர் நெஞ்சம்

கசிப்பு விற்பனை அதிகரிப்பு

ஆரையம்பதியில் சட்டவிரோத கசிப்பு தயாரிப்புக்கள் அதிகரித்துள்ளது. ஆரையம்பதியில் இச் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்வோரைக் கைது செய்யும் அதிகாரியின் வீதியிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது. ஆரையம்பதி மாரியம்மன் கோயில் வீதி, பேச்சியம்மன் கோயில் வீதி செல்வாநகர் போன்ற சில இடங்களில் இவ்வுற்பத்தி நடைபெறுகின்றது. இதனால் தினம் தினம் விடிந்தவுடன் ஒரு கூட்டம் இக்கசிப்பை அருந்துவதற்கு வந்து விடுவார்கள். இக் கசிப்பு உற்பத்திக்கு முட்கம்பிகள், நுளம்புச் சுருள்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றது. இது தொடர்பாக முறைபாடுகள் செய்தும் பயனளிக்கவில்லை. இறுதியில் தினக்கதிர் மூலம் இச் சட்டவிரோதச் செயலைத் தடுக்கலாம் என்ற நம்பிக்கையுடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று தினக்கதிருடாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தனியார் பஸ் கட்டணங்களுக்கு வரையறை ஏதும் இல்லையா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டு வருகின்ற தனியார் பஸ் சேவைகளுக்கு குறிக்கப்பட்ட கட்டணம் என ஒன்று இல்லையா? அனேகமாக சேவையிலிடுபடும் தனியார் "வான்களில் நினைத்த போக்குக்கு கட்டணம் அறவிடப்படுகிறது.

அண்மையில் நான் கோரகல்லி மடுவிலிருந்து மட்டக்களப்பு வருவதற்காக வான் ஒன்றில் ஏறினேன். நடத்துனர் மட்டக்களப்புக்கான கட்டணமாக 13 ரூபா அறவிட்டார்

இது பற்றிக் கேட்டபோதும் இது தான் எமது கட்டணம் விருப்பமில்லாவிட்டால் இறங்குங்கள் எனத் தெரிவித்தார் நடத்துனர்.

குழந்தையுடன் ஏறிய ஓர் பெண்மணி குறித்த கட்டணம் அதிகம் என்று மறுத்தபோது அவர் வாகனத்தை விட்டு இறக்கிவிடப்பட்டார்.

போக்குவரத்துப் பிரச்சினை பெரும் சிக்கலாகவுள்ள எமது பிரதேசத்தின் தனியார் பஸ் உரிமையாளர்கள் இவ்வாறு நடந்து கொள்வது சரியா?

இலங்கையின் எப்பகுதியிலும் அரச பஸ் கூட்டுத்தாபனங்களுக்கு இருப்பது போல் தனியார் பஸ்களுக்கும் கட்டண விதிமுறைகள் உண்டு.

எமது பிரதேசத்தில் மட்டும் இவ்வாறு கட்டண விதிமுறைகள் அவதானிக்கப்படாதது ஏன்? உரியவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

சங்கர்
மட்டக்களப்பு

ஆன்மீகம் அறிவோம்

''உள்ளுவதெல்லாம். உயர்வுள்ளல்'' என்பதற்கேற்ப. உயர்ந்தனவற்றை சிந்திக்க வேண்டும். ஆன்மீக வாழ்க்கைக்கு உயர்ந்த சிந்தனைப்போக்கு உதவிசெய்யும். நமக்கு மனத்திடம் தேவை. நமது மன எண்ணங்களை ஒரு முகப்படுத்த வேண்டும். சிந்தனைகளைச் சிதறவோ, பதறவோவிடப்படக்கூடாது. தூய்மையான சிந்தனைகள் நம்மைத் தூயவர்களாக்கும். கெட்ட சிந்தனைகள் நம்மைக் கெட்டவர்களாக்கும். வழியில் வழுக்கி விழாதிருக்க, துர்நடத்தையிலிருந்து விடுபட, காம, தீய இச்சை உணர்வுகளில் இருந்து விடுபட, தகுதிமிக்க ஆன்மீக பெருங்கருணையும் பேரருளும் உடைய குரு உபதேசம் கேட்க வேண்டும். குருவை முதல் நம்ப வேண்டும். குரு எனக்கு உதவி செய்வார், நான் சுத்தமாகப் போகிறேன் என்ற எண்ணத்துடனும் நம்பிக்கையுடனும் குரு உபதேசம் நன்றாகப் பதியும் வண்ணம் கேட்கவேண்டும் "இது நம்முடைய இஷ்ட தெய்வம். இதை நாம் தியானம் செய்தால், போகப் போக நாம் பூரணத்துவத்தைப் பெறலாம்." என்னும் குருவின் உபதேசத்தை சிரமேற் கொண்டு, நாம் சிந்திப்பதெல்லாம் உயர்வுள்ளதாகவே சிந்தித்து, நமது ஆன்மாவை பழுதாக்காது ஆன்ம பலமும், மனப்பலமும் கொண்டு வாழவேண்டும். ஆகவே குரு துணையை நாடி, குரு வழி சென்று, குரு சிந்தனைகளைச் சிரமேற் கொண்டு ஆன்மீகத்தில் உயர்வடைவோம்.

அருட்.சகோ.ஞா. மரியநாதன்

கல்லடி – உப்போடைப் பகுதி வீட்டின் மீது டொம்பா கிரனைட் தாக்குதல் !

(சே. பங்கயற்செல்வன்)

கல்லடி – உப்போடை திருமகள் வீதியை சேர்ந்த சீனித்தம்பி குருகுலசிங்கம் என்பவரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு 9.35 மணியளவில் "டொம்பா கிரனைட் " இனந்தெரியாதோரால் ஏவப்பட்டுள்ளது. வீட்டுக்காரர் சீ. குருகுலசிங்கம் இவரது மகள் ஆகியோர் சிறு காயங்களுக்கு உள்ளாகியு ள்ளார்கள். அத்தோடு வீட்டின் முன்பக்க கூரை ஓடும் சிதறியதுடன் சில தளபாடங்களும் சிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இது பற்றி அறிய சம்பவம் நடந்த இல்லத்திற்கு சென்ற வேளை வீட்டுக்காரரின் மனைவி தினக்கதிருக்கு தெரிவித்ததாவது.

நேற்று முந்தினம் இரவு 9.30 மணியளவில் வழமைபோல் வீட்டின் முந் வீராந்தையில் நான் எனது கணவர் பிள்ளைகள் ஆகியயோர் நித்திரை கொண்டிருந்தோம் அப்போது அருகாமையில் பாரிய வெடிச்சதம்தம் கேட்டது குண்டுச் சத்தம் போல் இருந்தது. உடனே எனது கணவர் நித்திரையில் இருந்து எழுந்து மின்குமிழ் சுவிட்சை அணைத்து விட்டு மீண்டும் நித்திரை கொண்டார். சில நிமிடங்களுக்கு பிறகு முதல் தடவை கேட்ட சத்தத்தை விட பாரிய சத்தத்துடன் வீட்டின் கூரையை பொத்துக் கொண்டு வீட்டினுள் ஏதோ ஒன்று விழ நாங்கள் அலறி அடித்துக்கொண்டு நித்திரையில் இருந்து எழுந்து செய்வதறியாது பதறினோம்.

எனது கணவரின் வலது கால் வயிறு ஆகியவற்றில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது மகளின் உதடு காது முகத்திலும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன இவ்அசம்பாவிதத்தை தொடர்ந்து உடனே அருகில் உள்ள பொலிஸ் நிலைய பொலிசாரிடம் முறையிட்டோம் பொலிசாரும் வந்து பார்வையிட்டு சென்றுள்ளார்கள்.

திருமலை.....

வெள்ளைமணல் கடற்கரைப் பிரதேசத்தில் இருந்து விடுதலைப்புலிகள் கடற்படைத்தள மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலை முறியடிக்கச் சென்ற எம்.ஐ.24 ரக ஹெலிகப்டர் விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டது. மேற்படி ஹெலி கிண்ணியா உப்பாறு பகுதியில் தீப்பற்றி வீழ்ந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஹெலியில் நான்கு பேர் பயணம் செய்துள்ளனர். இவர்கள் நால்வரும் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

500 குடும்பங்கள் இடம்பெயர்வு

இதேவேளை கடற்படை தளத் தாக்குதலில் ஈடுபட்ட ஒருபகுதி விடுதலைப் புலிகள் நாச்சிக்குடா பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அப்பகுதிக்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

கரிமலை ஊற்றுப் பகுதிக்குள் இருந்த இராணுவத்தினர் அப்பிரதேசத்தை சுற்றிவளைத்து இருந்தனர்.

சுற்றிவளைப்புப் பகுதிக்குள் பொதுமக்களும் சிக்கியிருந்ததால் இராணுவத்தினர் ஏககாலத்தில் தாக்குதல் நடத்தவில்லை.

நேற்று மதியம் இப்பகுதியில் இருந்து மக்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக இடம்பெயருமாறு இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து சுமார் 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

நாச்சிக்குடா முஸ்லிம் மகாவித்தியாலம். அல்மினா வித்தியாலயம் சிங்கள மகாவித்தியாலயம் வெள்ளை மணல் மகாவித்தியாலயம் என்பவற்றில் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு நேற்று திருமலை பிரதேச செயலகத்தினால் உணவு வழங்கப்பட்டது. இவர்கள் மீளத்திரும்பும் வரை இவர்களுக்கு உணவு வழங்குவதற்கான நடவடிகை எடுக்கபட்டுள்ளதாக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் வி. வேலும்மயிலும் தெரிவித்தார்.

நேற்று இரவு மீண்டும் தாக்குதல்

நேற்றிரவு 6.30மணியளவில் மீண்டும் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ள எம்.ஐ. 24ரக ஹெலி வீழ்ந்து நொருங்கிய பகுதியிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

மூன்று பொதுமக்கள் காயம் !

நேற்றுக் காலை கடற் படையினராலும் இராணுவத் தினாலும் ஏவப்பட்ட எறிகணைகள் கிண்ணியா. வெள்ளைமணல் பரப்பில் வீழ்ந்து வெடித்துள்ளது.

இவ்வாறு வீழ்ந்து வெடித்ததில் மூன்று பொதுமக்கள் காயமடைந்து திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இராணுவ வீரர் ஒருவர் பலி !

நேற்றுக் காலை கிண்ணியா திருமலை வீதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த மோட்டார் சைக்கிள் இராணுவ ரோந்து அணிமீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஒரு இராணுவ வீரர் பலியானர்.

மற்றுமொருவர் காய மடைந்துள்ளார்.

திருமலை நகர மக்கள் அச்சம்

நேற்று அதிகாலை 6.00மணியளவில் பாரிய குண்டுச்சத்தங்களுடன் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் அச்சத்திற்கு ள்ளகியுள்ளனர்.

சரமாரியான எறிகணை வீச்சும் கலிபர் ரக துப்பாக்கி வேட்டுக்களும் திருமலை நகரப் பகுதிகளை அச்சத்திற் குள்ளாகியுள்ளது. இச்செய்தி எழுதப்படும் வரை மோதல்களும் செல்வீச்சுக்களும் தொடர்ந்த வண்ணமுள்ளதாக எமது நிருபர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை கிண்ணியா நகரப்பகுதி பாடசாலைகள், நேற்று இயங்கவில்லை.

அரச அலுவகங்கள், வங்கிகள், கடைகள் என்பன மூடப்பட்டிருந்த தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போலியோ.....

இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத பிரதேசத்தில் இருப்பதும். குறிப்பிடத்தக்கது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் 28ம் திகதி இம்மருந்தைப் பெறாதவர்களுக்கு அந்த வாரம் முழுவதும் வீடு வீடாகச் சென்று அம்மருந்தை வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை உத்தியோக பூர்வமாக இம்மருந்து வழங்கும் வைபவம் மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் சுகாதார சேவைப் பணிப்பாளர் எஸ் தேவராஜன் தலமையில் 28ம் திகதி காலை 9.00 மணிக்கு நடை பெறும்.

காத்தான்.....

செயலிழக்கச் செய்யும் படையினர் மூலம் இந்த இரு குண்டுகளும் செயலிழக்க செய்யப்பட்டன.

இதனால் எவ்வித பாதிப்புகளும் நிகழவில்லை இதனால் போக்குவரத்து சுமார் 1 மணித்தியாலமாக தடைப்பட்டது. இது இவ்வாறிருக்க காத்தான்குடி மத்திய பஸ் நிலையத்திலிருந்தும் ஒரு குண்டுப் பாரசல் கண் அடெடுக்கப்பட்டு படையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

குமாரதேவன் புனிதவாணி என்பவரது 728622547v எனும் இலக்கத்தையுடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரிய நபர் தம்மை அத்தாட்சிப்படுத்துவதன் மூலம் அடையாள அட்டையை எமது தினக்கதிர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான படுகொலை களையும் மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தி, சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட மனித உரிமை அமைப்புகளின் கவனத்திற்கு கொண்டுவந்தவர்கள் பத்திரிகையாளர்களே,

உண்மையை உலகிற்கு கூறிய பத்திரிகையாளர்கள் காணாமல் போனார்கள், கைதுசெய்யப்பட்டார்கள்.

என அந்த அறிக்கை தொடர்கின்றது.....

தமிழ் சமூகத்தின் குரலாக ஒலிப்பவர்கள் பத்திரிகையாளர்கள்

பத்திரிகையாளனின் மறைவு குறித்து எதிர்வரும் சனிக்கிழமை மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெறும் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கிழக்கி லங்கை பத்திரிகையாளர் சங்கம் அனைவருக்கும அழைப்பு விடுத்துள்ளது.

அது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :

இருண்ட சிறைச் சாலையாக்கப்பட்ட யாழ்.மண்ணில் தமிழினத்தின் இன்னல்களை அவலங்களை உலகறியச்செய்த உற்றநண்பன் நிமலராஜனை இழந்த மாளாத சோகத்துடன் உங்களுடன் பசுகிறோம். நாங்கள் உங்களிடம் வாக்குப்பிச்சை கேட்டுவரும் அரசியல்வாதிகளல்ல உங்களிடம் எந்த பிரதியுபகாரத்தையும் எதிர்பார்க்காது ஓய்வூதியமின்றி, காப்புறுதி இன்றி மக்களின் குரலாக ஒலித்து வந்த நிமலராஜனை இழந்து விட்டோம். வேட்டையாடத் திரிபவர்கள் எங்களையும் தடிவரலாம். எங்களைக் கொன்றொழித்துவிட்டால் தமிழ் சமூகத்தின் குரல்வளையை முற்றாக நசுக்கிவிடலாம் என நினைக்கின்றனர் ஸ்ரீலங்காபேரினவாதிகளும், அவர்கள் போடும் றொட்டித்துண்டுக்காக தமிழினத்தையே விற்கும் எட்டப்பர்களும். ஆனால் நாம் அஞ்சப்போவதில்லை இன்று சந்தர்ப்பவாத தமிழ் அரசியல் வாதிகள் தமிழ் மக்களின் வேதனைகளையும், துயரங் களையும் புறக்கணித்து ஸ்ரீலங்கா அரசுடன் பேரம்பேசித்திரிகின்ற இச்சூழலில் பத்திரிகையாளர்களே தமிழ் சமூகத்தின் குரலாக ஒலித்து வருகிறார்கள். வடக்கு கிழக்கில் தமிழ் அரசியல்வாதிகள் வாளாவிருந்தவேளையில் படுகொலைகள், பாலியல்பலாத்காரங்கள், கைதுகள், கடத்தல், காணாமல்போதல், சித்திரவதைகள், என சகல அடக்குமுறைகளையும் அம்பலப்படுத்தியவர்கள் பத்திரிகையாளர்களே. செம்மணி உட்பட யாழ் புதைகுழிகள் தொடர்பாக தனிமனிதனாக நின்று அம்பலப்படுத்தினானே நிமலராஜன் அவனுக்கு வழங்கிய பரிசு இதுதானா? நவாலி தேவாலயம் மீது விமானக்குண்டுத்தாக்குதல் நடத்தி அப்பாவி உயர்களை பலியெடுத்த சம்பவத்தை அரசாங்கம் மூடிமறைக்க எடுத்த பிராயத்தனத்தை முறியடித்து, ஆதாரபூர்வமாக புகைப்படங்களுடன் வெளியுலகிற்கு வெளிப்படுத்தினான் நிமலராஜன். அதன்பின்பே உலகம் உண்மையை அறிந்துகொண்டது தென்மராட்சியில் இராணுவமுற்றுகைக்குள்ளாகி மக்கள் வெளியேறமுடியாது தவித்த வேளையில் தன்உயிரையும் துச்சமாக மதித்து அங்குசென்று அம்மக்களின் அவலங்களை அவர்களின் குரலிலேயே ஒலிப்பதிவு செய்துவந்து உலகறியச்செய்த செயல்வீரன்தான் நிமலராஜன். நிமலராஜனின் செய்திகளால் ஏற்பட்ட சர்வதேச அழுத்தங்களே அந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வழிவகுத்தது. 1990க்குப்பின்னர்

திடீர் சுற்றிவளைப்பு

(களுவாஞ்சிகுடி நிருபர்)

களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு பகுதி நேற்று மு.ப 10.00 மணியளவில் படையினரால் சுற்றிவ ளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் ஆண்கள். பெண்கள் சுமார் 60- பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட சமயம் மட்டக்களப்பு, கல்முனை, பட்டிருப்பு ஆகிய இடங்களுக்கான போக்குவரத்துக்கள் சில மணி நேரம் தடைப்பட்டதாக தெரிய வருகின்றது.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.